செந்தமிழ்

தொகுதி :	திருவள்ளுவர் 2005 ஆம் ஆண்டு	பகுதி
69	பிரமாதீச பங்குனி மார்ச் 1974	1

1. **காலமும் கோலமும்.** ... 1
தவத்திரு. கவியோகி
சுத்தானந்த பாரதியார்.

2. **இரண்டாம் சிலப்பதிகாரக் கருத்தகம்.** ... 8
டாக்டர். வ. சுப மாணிக்கம்

3. **அகம் வீடளிக்கும்.** ... 13
ப. இராமன் எம். ஏ.

4. **தியாகச் செம்மல்.** ... 19
திருமிகு செஞ்சொற்பாவலர்
ப. சங்கரலிங்கம்.

5. **சிலம்பு – பெருங்கதை ஓர் ஒப்பாய்வு.** ... 21
திருமிகு. இரா. காசிராசன். எம். ஏ.

6. **பாவேந்தர் கவித்திறன்.** ... 25
திருமிகு. பேராசிரியர். வ. பெருமாள்.

7. **தனக்குவமையில்லாத் தமிழ் முகில்.** ... 29
திருமிகு. தமிழ்த் தொண்டன்
ஆ. ஆண்டியப்பன்.

8. **தமிழ்த் தொண்டனும்
தண்டமிழ் மன்னனும்.** ... 37
கவிஞர். ப. சங்கரலிங்கம்.

9. " கால்டுவெல் "
சமயத் தொண்டரா?
தமிழ்த் தொண்டரா? ... 38
புலவர். சி திருஞானசம்மந்தன்.

10. தாயுமாணவரின் பராபரக்கண்ணி. ... 45
திருமிகு. பு. மு. சாந்தமூர்த்தி. எம். ஏ.

11. திராவிட மொழிகளில் ... 52
வண்ணனை அமைப்பும்,
வரலாற்று அமைப்பும்.
திருமிகு. இரா. கோதண்டராமன்,
எம் ஏ. (தமிழ்), எம். ஏ. (மொழியியல்)

காலமும் கோலமும்

தொடர் கதை

தவத்திரு
(கவியோகி சுந்தானந்த பாரதியார்)

1. கோயில் நமது தாயில்

கடவுளை நம்புகிறீர்களா, இல்லையா? உங்களுக்குச் சமய உணர்ச்சி உண்டா, அன்று? இந்தக்காலம் கடவுளை ஆய்குழலில் (Testtube) கொண்டு காட்டினாலும், ஐயுறும் மூளைகள் இருக்சினறன; ஆதலால் கடவுள் – வழக்கை உள்ளத் தானுக்கே விட்டுவிடுவோம். மதுரை மீனாட்சிசுந்தரேசர் கோவிலிற் புகுவோம்.

அது தனியுலகம். கோவிலுக்குட் சென்று பொற்று மரைக் கரையில் திருநீற்றுப் பிள்ளையார் பக்கத்தில் அமர்வோம்; ஏதோ ஓர் அமைதியுண்டாகிறது. நூற்றுக் கணக்கான மக்கள் கோவிலுக்கு வருகின்றனர்; நம்பிக்கையில்லாமலா அவர்கள வருகிறார்கள்? மீனாட்சி சந்நிதி திறந்ததும் கூட்டத்தைப் பாருங்கள் சீட்டு வாங்கிக் கொண்டு எத்தனைபேர் தேங்காய் பழம் படைத்து கற்பூர வொளியைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு விபூதி குங்குமம் வாங்கி இட்டுக் கொண்டு வருகிறார்கள். அவர்களை" கோவிலுக்குப் போனீர் களே கடவுளைக் கண்டீர்களா, கல்லுருவைக் கண்டீர்களா? கல்லுருவுக்கு சொல்லுரு உண்டா? நீங்கள் படைக்கும் உணவை அது சாப்பிடுமா? சாப்பிட்டதா? என்றெல்லாம் கேட்டால் காதை மூடிக்கொண்டு நம்மவர் செல்லுவர். ஏனெனில் நம்பவருக்குத் தெரியும். என்ன தெரியும்? ஆலயம் புகுவது அமைதியை நல்கும் என்பது வேதமா ஆகமமா சாத்திரமா தோத்திரமா, உபாசனையா – இவையெல்லாம் ஏதோ சிலருக்குத் தெரியலாம் பெரும்பாலோருக்குக் கோவிலுக்குப் போனால் வீட்டுத்தொல்லையில்லாது மனம் அமைதி பெறுகிறது; உலகவம்பில்லாமல் உள்ளம் உவக்கிறது என்பது தெரியும்.

கோயில் என்பது நாடகக் கொட்டகையன்று; இரண்டிற்கும் கட்டணம் வைத்திருக்கிறார்கள் – என்றாலும் கோயில் கோயிலே; கொட்டகை கொட்டகையே. கோயில் என்றதும்

குருக்கள் மணிகேட்கிறது; தேங்காய் பழம் சூடன் அர்ச்சனை, திருநீறு குங்குமம்—இவை நம்முன் நிற்கின்றன. ஒரு கற்சிலைக்குப் பாலும் நீரும் இளநீரும் ஊற்றிக் கழுவி பட்டுடித்தி மலரணியும் பொன்னணியும் சூட்டி அழகு செய்கின்றனர் நமது வீட்டிலும் பெண்கள் அவ்வாறே குளித்து, அணிந்து அணிமணி சூடி ஒப்பனை செய்து கொள்ளுகின்றனர். இருந்தாலும் இரண்டிற்கும் வேற்றுமையுள்ளது. கடவுளுருவுக்கு அழகு செய்யும் காட்சியில் ஏதோ ஒரு காந்தசத்தியுள்ளது அதை எத்தனையோ கவிகள் பாடுகின்றனர். காளிதாசனின் சியாமளா தண்டகத்தையும், அபிராமபட்டரின் அந்தாதியையும் தேவார திருவாசகங்களையும் பாடினாலும் கேட்டாலும் மனம் மகிழ்ச்சியடைகிறது, கவலை மறக்கிறது. கோவிலில் அழகுக்கலை குலுங்குகிறது. சிற்பத்தின் அற்புதம் திகழ்கிறது. நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். கடவுள் நம்முடன் கைகுலுக்கிப் பேசுவதில்லை. ஏனெனில் நமக்கு அந்தப்பக்குவம் வரவில்லை. என்றாலும் ஏதோ ஓர் உணர்ச்சி வசப்படுகிறோம்; கோவில் அழகின் கொலுவிருக்கையாகும். அருளின் கருவூலமாகும்.

நமது நாட்டில் கோயிலைச் சுற்றித்தான் மக்கள் வாழ்வே அமைந்துள்ளது. நமது புலமைச் சீர்களெல்லாம் கோவிலை நடுவாகக் கொண்டன. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் - பாடிய அருட்பாடல்களெல்லாம் கோயிற் கலையின் ஆர்வக்குரலே. நமது பழைய வேதாகமங்களெல்லாம் கோயிலால் வளர்ந்தன. பெரியபுராணம் திருவிளையாடற்புராணம், திருப்புகழ், திருமந்திரம் எல்லாம் கோயிலின் கொடையணிகளே.

கோயில் பலவகை- அகம், புறம், உள்ளம், உலகம். "உள்ளம் பெருங் கோயில்" என்கிறார் மூலர்; அதே மூச்சில் உடலை "நடமாடும் கோயில்" என்கிறார். இன்னும் விரிவான அறிவாளர், கடவுளுக்கு உயிர்களே உடலம்; உயிர் மேனிப் பெருமானுக்கு உலகமே கோவில்; உயிர் வாழ்வே ஆடல் என்கின்றனர்......... எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவன் எல்லாவுடலும் இறைவன் ஆலயமே என்றுணர்வர் உயர்புலவர்.

2. அறிவொளி

இந்தச் சிந்தனையெல்லாம் நடப்பது எங்கே? அறிவொளியின் உள்ளத்திலேதான். அறிவொளி தனித்தமிழ்ப் புதுமையன் - புதுமை வேண்டும் பொதுவன், ஞானப் + பிரகாசம் என்ற பெயரை 'அறிவொளி' என்று மாற்றிக் கொண்ட போதே அவன் பழமையை ஐயுறும் பகுத்தறிவாளன் ஆனான். அறிவொளி தன் குழுவுடன் இன்று மீனாட்சி கோவிலுக்கு வந்துள்ளனர்.

அறிவொளி மதுரைக்கல்லூரி மாணவன்; ஷெல்லியும் பைரனும், ஷேக்ஸ்பியரும், ஷாவும், ரஸ்ஸலும், இங்கர்சாலும், சாண்டும், ஷோபன்ஹாரும், ஜுங்கும் அதன் மூளையில் புதிய அலைகளை வீசிக் கொண்டிருக்கின்றனர். அவனை ஆத்திகனா நாத்திகனா என்ன முடியாது; பழைய கலைகளைக் குப்பை போல் ஒதுக்குவோனா, புதிய விஞ்ஞானப் பித்தனா எனவும் உறுதியாகச் சொல்லமுடியாது அறிவொளி சிந்தனை மேடையின் ஹாம்லெட்டு தெருவில் நடக்கும் போது கூடச்சிந்தனை அவனை எங்கோ உந்திச்செல்லும். கூட ஆள்வராவிட்டால் உந்துவண்டி மோதி மண்ணில் உருண்டு மருத்துவப் படுக்கையில் மல்லாந்திருப்பான். அறிவொளி நூற்றுக்கு எண்பது ஆங்கில நம்பி. நூற்றுக்கு இருபது தமிழர் திருமறைகளைச் சிந்திப்பவன் தமிழ் விரும்பி. நம்பிக்கும், விருப்பிக்கும் இடையே அவன் மனம் ஊசலாடுகிறது. அவன் அடியானும் இல்லை கொடியானும் இல்லை. ஆண்டான் - அடிமைத்திறனையோ, ஆளைச்சுற்றும் மதங்களையோ அவன் ஒப்புவதில்லை. அவன் நூல் நூலாகக் கற்றான்; எனினும் ஏதோ ஒன்றை உள்ளத்தில் தேடித்தேடி உழன்றான். சிந்தனை உள்ளிருந்தே வருகிறது. உள்ளம் உள்ளே துடிக்கிறது, அந்தத்துடிப்பால் வாழ்வு நடக்கிறது. இந்த துடிப்பை முடிக்கி விட்டது யார்? இந்த உயிர்க்கடிகாரத்திற்குச் சாவி கொடுத்தது யார் ...... என்றே அவன் உன்னித்திரிகிறான். அறிவொளி திடீரென்று மௌனத்தில் ஆழ்ந்து விடுவான்; தனியே குந்தித் தலையில் கை வைத்து ஒன்றுந்தோன்றாது 'உம்' என்றமர்வான் "ஏண்டா உம்மணாமூஞ்சி - என்ன வந்தது உனக்கு" என்று நண்பன் "பேச்சழகன" கேட்பான் .... "எனது தனிமையில் குறுக்கிடாதே அப்பாலே நில்" என்று

முகத்தை மூடிக்கொள்வான் அறிவொளி. பேச்சழகன் மற்ற நண்பருடன் அறிவொளி - ஆராய்ச்சியிலே இறங்குவான்.

கோவில்மணி டணார் டணார் என்று அடிக்கிறது. "அரோகரா" போட்டு அன்பர் கருவரையைப் பார்த்துக் கன்னத்திற் போட்டுக் கைகுவிக்கின்றனர். மீனாட்சியுருவம் கருவரை இருளில் மங்கலாகத் தெரிகிறது. அதனருகே மினுக்கும் விளக்கே பளிச்சிடுகிறது. விளக்கொளியில் மீனாட்சிக்குச் சூட்டிய பொன்மணியணிகள் டாலடிக்கின்றன .... சீட்டு வாங்கினவர் கொண்டு வந்த தேங்காய் பழத்தை தேவேந்திர பட்டர் உள்ளே எடுத்துச் சென்று "நமஹ! நமஹ" என்று மெண மெணப்புடன் மலர்தூவிச் சூடன் ஏற்றுகிறார் - அரைத் தேங்காய் முடியில், ஒரு பழம், விபூதிகுங்குமப் பொட்டணம், இரண்டு மலர்கள் போட்டு பட்டர் தருகிறார், அன்பர் வாங்கிச் செல்லுகின்றனர்.

அறிவொளி இதையெல்லாம் நாடகக் காட்சியாகப் பார்த்து விட்டு ஒரு மூலையில் அமர்ந்து போனான்... பேச்சழகன் அவனை மூலைப்பிள்ளையார் என்று வீசும் வாய்ச்சிலம்பம் அவன் காதில் ஏறவேயில்லை ...... கண்ணும் உள்ளே திரும்பியது. ஏதோ உட் — கனவு

3. குயிலா, குரலா?

இந்தக் கனவைக் கலைத்தது ஒரு தீங்குரல் மீனாட்சி சந்நிதிச் சதுக்கத்திலிருந்து அந்தக் குரலில் வருகிறது — அது குரலா, குயிலா?

கமாசு ராகத்தில் ஏகதாளத்தில் பாட்டலை வீசுகிறது— பெண்குரல் யாழும் குழலும் குயிலும் கூடிக்குழைகிறது.

தீங்கனும்பின் சாறெனத்
திதிக்குமுக் கரும்பெனப்
பூங்கமழுந் தேனெனப்
புதியபால் அமுதென

ஓங்கிசைத் தமிழென
உ[illegible] குழலென
ஈங்கெனுள் இசைக்கும் அன்பின்
இன்பமே யிறைவியே

எழுந்தான் அறிவொளி இசைகவர்ச்சியால் விரைந்தான்.

மீனாட்சி சன்னதியில் பெருங் கூட்டம். வெளியிலும் கூட்டம். தீங்குரல் கேட்கிறது. குயில் பாடுகிறது. ஆனால் குயிலை யாரும் அணுக முடியவில்லை. மீனாட்சி கோயிலின் பின்புறத்திலிருந்து இசை வருகிறது. எல்லோரும் அப்படியே சொக்கி நிற்கின்றனர். இந்தச் சமயம் யாழ் எடுத்துக் கொண்டு மற்றோர் அழகி கூட்டத்துள்ளே புகுந்தாள். கோயில் தருமகர்த்தா கூட்டத்தை விலக்கி, அந்த அம்மாளை வழிநடத்தினார். கூட்டம் விலகும்பொழுது அறிவொளியும், பேச்சழகனும் மெல்ல உள்ளே புகுந்துவிட்டனர். அறிவொளி தூய வெள்ளுடையும், மேலே சரிகைப் பட்டும் போர்த்தி அழகாயிருந்ததனால் அவனை யாரும் தடைசெய்யவில்லை. பேச்சழகனும் ஆளழகன் ; நல்ல உயரமானவன் ; பலவான். இருவரும் அந்தப் பெண் பாடுமிடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டனர். வீணை அவள் குரலுடன் கூடிக் குழைந்து இசை விருந்து மிக இனிமையாக இருந்தது. அந்த இனிமை அறிவொளியின் உள்ளத்திற்கு அமுதமாயிருந்தது. அவன் சிந்தனையில் ஒரு புது மலர்ச்சி உண்டானது. தன் முன் அழகுத் தெய்வமே அமுதக் குரலெடுத்து, வாழ்வின்பத்தை ஊக்குவதுபோல உணர்ந்தான். குயில் அகவிய இரண்டு பாட்டை இங்கே தருவோம்.

“ வன்னமாம் உலகக்கோவில்
வாழுமுன் உயிர்க்குலம்
பின்னமாய்ச் சிதைந்திடாது
பேரின்பத்தில் ஒன்றியே
உன்னருளில் ஓர்குல
வுணர்வுகொண்டு வாழவே
அன்னை நின்னை வேண்டினேன்
அமுதசுத்த சக்தியே ! ”

"அங்கையற்கண் அன்னையாய்
அருள்பொழிந்த சக்தியே!
பங்கயக் கரத்தினுல்
வரந்தரும் பராம்பிகே!
துங்கநல் லடியவர்
துணைவரும் இணையிலாத்
தங்கமே கருணையான
தாயமுத மேசரண்!"

இதைப் பல ராகங்களில் அவள் பாடினுள், ஒவ்வொரு இராகமும் அறிவொளி மனதிலே புதிய கனவுகளைத் தூண்டியது. தருமகர்த்தா ஒலி-பெருக்கியை வைத்தார். அதனுல் கோவில் முழுதும் அமைதியாக அமர்ந்து பாட்டைக் கேட்டது. அருகில் இருந்தவர்கள் ஆடிக் காற்றிலே தென்னை மரம் போல உடலை ஆட்ட ஆரம்பித்தனர். குழுமியிருப்பவர்கள் தலை அவிழ்ந்து ஈச்சமரம்போல ஆடியது. அறிவொளி இசையின்பத்துடன் கலந்துபோனுன்.

பேச்சழகன் சீட்டுக்களை அனுப்பினுன். அதில் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற தேவாரம் பாட வேண்டும் என்று வேண்டினுன். குயில் பாடும்பொழுது அறிவொளிக்குக் கண்ணீர் கசிந்தது. அதன்பிறகு "மற்றுப் பற்றெனக்கின்றி" என்ற தேவாரம் பாடினுள். பிறகு திருப்புகழ் 'நாதவிந்து கலாதி' நடந்தது. தாயுமானவரின் பண்ணேன் உனக்கான பூசை ஒருவடிவிலே! என்ற பாட்டைப் பாடும்பொழுது அறிவொளி உள்ளெழுச்சி பெற்றுன். "நான் கும்பிடும்போது அரைக்கும்பிடாதலால் நான் பூசை செய்யன் முறையோ" என்ற வரிகளை வசந்தா ராகத்தில் கேட்டான். அவனுள்ளம் துள்ளிக் குதித்தது. "இதுகாறும் எதையோ நம்பி ஏமாந்தேன். இனி என்னுள் விளங்கும் உண்மையை அறியவேண்டும். அதற்கு ஒரு சொல் வேண்டும். அந்தச் சொல்லை ஒரு குரு தரவேண்டும். அந்த குரு தன்னைத் தடுத்தாண்டு கொள்ள வேண்டும்; என்ற ஆர்வம் மனத்தில் உதித்தது. குருவை எங்கே தேடவேண்டும்? எதிரே பாடும் பெண்ணே எனக்குக் குரு; அவள் பாட்டே எனக்குஉபதேசம்"

என்று அறிவொளி நினைத்தான். தாயுமானவரின் ஆனந்தக் களிப்பை அந்தப் பெண் பாடினாள்.

"சற்றும் பேசாத காரியம் பேசினான் தோழி" என்று பரசு ராகத்தில் அவள் இசை அலைகளை வீசினாள். "பேசாத காரியம் என்ன?" என்று அவன் மனம் சிந்திக்கத் தொடங்கியது. பாட்டு 9 மணிக்கு முடிந்தது. கோவில் தருமகர்த்தா குருக்களைக் கூப்பிட்டு அருச்சனை செய்யச்சொன்னார். குருக்கள் அருச்சனை செய்து கற்பூரம் காட்டி இரண்டு இசைச் செல்விகளுக்கும் மலர் மாலையும், தேங்காய் பழமும், விபூதி குங்குமமும் வழங்கி 'பாட்டு அமுதமாயிருந்தது; தங்கள் பெயரென்னவோ' என்று வினவினார். அவள் நாணப் புன்னகையோடு, 'தாங்களே சொல்லிவிட்டீர்களே, எல்லாம் சிவன் செயல், எல்லாம் மீனாட்சியருள்' என்று அடக்கமாக நின்றாள். வீணைச் செல்வி தன் பெயர் வீணா என்றாள். இருவரும் பிரசாதம் வாங்கிக்கொண்டு வெளியே சென்றனர். கூட்டம் அவர்கள் பின்னே சென்றது. கோபுர வாசலில் கார் நின்றது. அதில் ஏறிக்கொண்டு இருவரும் மேலமாசி வீதியை நோக்கிச் சென்றனர். அறிவொளி மோட்டார் புறப்படுமட்டும் அங்கே நின்று பிறகு வீடு சென்றான். அவன் வீட்டிலா இருந்தான்? உடல்தான் இங்கிருந்தது. மனம் அமுதமயமானது. அந்தச் செல்வியின் பெயர் அமுதம்; அவள் பாட்டும் அமுதம்; அவள் அழகும் அமுதம்; அவள் அடக்கமும் அமுதம். அவள் எங்கேயிருக்கிறாள்? மேலமாசி வீதிப் பக்கம் சென்றாளே, காரில் சென்றாளே, அதனால் நல்ல இடத்துப் பெண், பெரிய பணக்காரியாய் இருக்கவேண்டும்; வீணை வாசித்த பெண் தன் பெயரையே வீணா என்றாள். இந்த இருவரையும் பார்க்க வேண்டும். எப்படிப் பார்ப்பது? எங்கே காண்பது? என் உள்ளத்தை ஈர்த்த அமுதத்தை எப்படியாவது நாளையே கண்டு பிடிப்பேன்" என்ற உறுதியுடன் அறிவொளி கம்ப இராமாயணத்தைப் பிரித்தான். அதில் மிதிலைக் காட்சிப் படலம் வந்தது.

"உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக்கரம் வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக்கரைகாணா

இமையா நாட்டம் பெற்றிலம் என்றார் இருகண்ணால்
அமையா தென்றார் அந்தர வானத் தவரெல்லாம்"

என்ற செய்யுளைப் பலமுறை படித்து அமுதத்தை அதன் உயிரோவியமாகக் கருதி மனக்கோயிலில் வழிபட்டான். இரவு கண்ணயர்ந்தபோது அமுதம் அவன் கனவில் தோன்றினாள். இன்பக் குரலில் இசைத்தாள். இனிய இசையழகில் அவன் உள்ளம் தோய்ந்தது. "பேசாத காரியம் பேசினான் தோழி" என்று உளறினாள். காலை புலருமட்டும் கனவும் நனவுமாகக் காலம் கழிந்தது. 'குயிலா குரலா, அமுதா அழகா" என்று அவன் உள்ளம் வினவிக்கொண்டிருந்தது. (தொடரும்)

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்த்துறையாசிரியர்

எட்டாவது கருத்தரங்கு

இரண்டாம் சிலப்பதிகாரக் கருத்தகம்

அண்ணாமலைநகர் பிப்பிரவரி. 17. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சார்பில் எட்டாவது கருத்தரங்கு பிப்பிரவரி 16, 17 ஆகிய இரு நாட்களிலும் அண்ணாமலை நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதற்குமுன் நிகழ்ந்த ஏழாவது கருத்தரங்கும், சிலப்பதிகாரக் காப்பியம் பற்றியது. எட்டாவது கருத்தரங்கும் அக்காப்பியம் பற்றியே நிகழ்ந்தது. சிலப்பதி காரத்தின் கதைக்கரு, திணைச்செய்தி, மன்னர்கள், புராணக் கூறுகள், கிளைக்கதைகள் முதலாய பல கூறுகளில் இக்கருத் தரங்கில் சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்புகள் ஆராயப்பட்டன. தமிழ்த்துறை ஆசிரியர்கள் பதின்மூவர் ஆய்வுக்கட்டுரைகள் படித்தனர். பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், விரிவுரை யாளர்களும் மாணவ மாணவியரும் பெருந்திரளாக வந்திருந்து இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

தொடக்கத்தில் இந்திய மொழிப்புல முதன்மையர், தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்

வரவேற்புரையில் ஆராய்ச்சி ஆற்றல் எல்லா மக்கட்கும் இயல்பில் அமைந்து கிடக்கின்றது; அந்த ஆற்றலை வெளிப்படுத்துதற்குக் கருத்தரங்குகள் வாய்ப்பளிக்கின்றன எனவும் சிந்தனை என்னும் நீர், குட்டையாகத் தேங்கிக் கிடக்காமல் ஓடிப்பாயும் முறையில் கல்வி நிலையங்கள் பயிற்சியளிக்க வேண்டுமெனவும், தொடக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளிகளில் கூட சிந்தனை வளர்ச்சிக்கு வாய்ப்பு நல்க வேண்டுமெனவும் சிந்தனைக்கு எத்துறையும் எப்பள்ளியும் விலக்காகக் கூடாது எனவும் வலியுறுத்தினர்.

பல்கலைக் கழக அறிவியற் புல முதன்மையர், விலங்கியற் பேராசிரியர் டாக்டர் பி. கோவிந்தன் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, 19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் தோன்றிய ஆராய்ச்சிக் கழகத்திற்கு இத்தமிழ்க் கருத்தரங்கை ஒப்பிடலாம் எனவும், பல்கலைக் கழகத்தின் பல்புல மாணவர்களும் இதில் கலந்துகொள்வது அவர்கள் தமிழ் அன்பையும், ஆராய்ச்சி ஆர்வத்தையும் காட்டுவதாகும் எனவும், இலக்கியத்தை ஆராய்வதுபோலத் தமிழில் வழங்கும் அறிவியற் கலைச்சொற்களையும் இத்தகைய அரங்குகள் ஆராய்ந்து முடிபுகாண வேண்டும் எனவும் சிறிய வடிவில் அறிவியல் தமிழ்ச் சொற்களை ஆக்கிக்கொள்ள வேண்டும் எனறும் மொழிந்தனர். தொடக்க விழாவின் இறுதியில் திரு. சிவ. திருநாவுக்கரசு நன்றி கூறினர்.

கருத்தரங்கின் முதற்பகுதி 16-2-74 பிற்பகல் துணைப் பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி தலைமையில் தொடங்கியது. திரு. அழ. பழநியப்பன் 'சிலம்பில் சோழன்' என்னும் கட்டுரையில் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறும் சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தானே என்றும், மாதவி அரங்கேறிய காலத்து அவனே அரசனாக இருந்தான் என்றும் கூறினர். திரு இரா. இராமலிங்கம் 'சிலம்பின் கதைக் கரு' என்னும் தலைப்பில் செல்வாக்குப் பெற்ற காவியக் கதைகளை வடிவம் மாற்றியும் காலத்திற்கேற்பக் கருத்து மாற்றியும்

புதுப்பித்தும் தனி ஒரு நிகழ்ச்சியை விரித்தும் பிற்கால எழுத்தாளர்கள் மேற்கொள்கின்றனர் எனவும் உரைத்தார். திரு. உ. பழநி 'சிலம்பில் சேரன்' என்னும் ஆய்வுரையில் ஐந்தாம் பதிற்றுப்பத்து அதன் பதிகம் சிலப்பதிகாரம் ஆகிய மூன்றிலும் வரும் வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராய்ந்து கண்ணகிக்குக் கல்லெடுத்த செங்குட்டுவனே பரணர் பாடிய சேர மன்னன் என்று கூறினார்.

17–2–74 முற்பகல் கருத்தரங்கிற்குத் துணைப் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் தலைமையேற்றார். திரு. சு. சாமிஐயா 'சிலம்பில் புறத்திணை' என்ற ஆய்வுரையில் தொல்காப்பியம் சிலப்பதிகாரம் வெண்பாமாலை மூன்றையும் ஒப்பிட்டுத் தொல்காப்பியர் காலத்திற்கும் பின்வந்த ஐயனாரிதனார் காலத்திற்கும் இடைப்பட்ட புறப்பொருள் துறை வளர்ச்சிகளைச் செய்தவர் இளங்கோ எனப் பாராட்டினார். திரு. சி. வேங்கடபதி 'பத்தினிப் பரவல்' என்னும் ஆய்வுத் தாளில் சிலப்பதிகாரத்தின் குறிக்கோள் பதிகம் கூறும் மூன்று பொருளாக இருந்தாலும், 'பத்தினித் தொழுகையே காப்பியம் முழுவதும் காணப்படும் முதற் குறிக்கோளாகும் என்று விரித்துரைத்தார். திரு. சிவ. திருநாவுக்கரசு 'சிலம்பில் புகார்' என்ற தம் ஆய்வுரையில் இளங்கோ புகார் நகரை வாழ்த்துகின்ற வாழ்த்திற்கும் பின்வரும் கதைப்போக்கிற்கும் முரண்பாடுகள் உள எனவும் புகார் நாட்டிய நிகழ்ச்சியும், மதுரை நாட்டிய நிகழ்ச்சியும் கோவலன் அவல முடிவிற்கு அடிப்படை நிகழ்ச்சிகளாகும் எனவும் எடுத்துரைத்தார். திரு. க. இராமச்சந்திரன் 'மூன்றும் மூன்றும்' என்ற தலைப்பில் சமயப் பொதுமை வேட்டுவ வரிக்காதையிலும் சிறந்து விளங்குவதைப் புலப்படுத்தினார். திரு. ஆறு. அழகப்பன் சிலம்புத் தொடராகிய 'நான் பத்தினியானல்' என்பதைத் தலைப்பாகக் கொண்டு பாண்டியன் தன் தவற்றை எண்ணி இறந்த பின்னும் கண்ணகி மதுரையை எரித்தது பொருந்துமா? எனவும் கண்ணகி ஒருமுலை குறைத்த செய்திக்கு ஏதும் மரபுண்டா எனவும் இரு வினாக்களை எழுப்பினார். பத்தினி எழுவரின்

கதைகளை முன்னே அறிந்தவள் ஆதலால் அவர்களைப்போல் தானும் ஆகவேண்டும் என்ற தூண்டுதல் கண்ணகிக்கு இருந்திருக்க வேண்டும் எனவும், உறுப்பைக் குறைத்துக் கொள்ளுதல் சமணப் பழக்கமாக இருக்கலாம் எனவும் கூறினர்.

17-2-74 பிற்பகல் கருத்தரங்கிற்குத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தலைமையேற்றார். 'சிலம்பில் புராணக் கூறுகள்' என்ற ஆய்வுரை படித்த திரு. சுப. இராமநாதன் திங்களைப் பாண்டியன் குலமுதல்வனாகக் கூறுவதும், ஞாயிற்றைச் சோழர் குல முதல்வனாகக் கூறுவதும் தமிழ் அரசர்களைச் சங்க காலம் போலத் தெய்வங்களுக்கு ஒப்பிட்டுக் கூருது தெய்வங்களாகவே கூறுவதும் இன்ன பிறவும் சிலம்பில் காணப்படும் புராணப்பகுதிகள் என்று எடுத்துக் காட்டினர். திரு. வெ. செயராமன் 'இளங்கோவடிகளின் சிறப்பியல்புகள்' என்ற கட்டுரையில் கருத்துக்களைப் பாத்திர வாயிலாகவே உணர்த்தல், பரத்தையான மாதவியை இழித்துக் கூருமை. தமிழக ஆரிய இலங்கை நாட்டு மன்னர்களை ஒன்றுபடுத்துதல். தம் சமயத்தை வெளிப்படக் கூருமை ஆகிய இளங்கோவின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தினர். திரு. பி. கே. சார்ச்சு, 'சிலம்பில் நான்காம் செய்தி' என்ற தலைப்பில் இல்லறம் கூறும் சிலப்பதிகாரம் இன்பக் காட்சிகளோடு துன்பத்தில் தோன்றும் அன்புக் காட்சிகளையும் எடுத்துக் கூறுவது எனவும் துன்பமே அன்பின் உறைவிடம் எனவும் துயரிடை அன்பு துலக்குறும் என்பதை நான்காம் செய்தியாகக் கொள்ளலாம் என்றும் கூறினர். திரு. நா. இராமலிங்கம் 'சிலம்பு மணம் ஐந்திணை நெறியா?' என்ற தலைப்பில் கோவலன் சாவக நோன்பி என்று சொல்லப் படுதலால் அவன் மணம் சமண சமயச் சார்புடையதாக இருக்கலாம் எனக் குறிப்பிட்டார். திரு. சோம. இளவரசு 'சிலம்பில் கிளைக்கதைகள்' என்னும் கட்டுரையில் சிலப்பதிகாரத்தில் உவமையாக, மேற்கோளாக, விளக்கமாக, பழம் பிறப்பாக, புராணமாக வருகின்ற கதைகளை எடுத்துக்காட்டி தேவந்தி, வம்பப்பரத்தன், மாங்காட்டு மறையோன், தெய்வச் சாலினி என்ற நால்வரின் கதைகளுமே காப்பிய வளர்ச்சிக்கும்

பாத்திரங்களின் மன வளர்ச்சிக்கும் துணையாக அமைந்த கிளைக் கதைகள் எனப் புலப்படுத்தினர்.

தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தம் முடிவுரையில் இவ்வாண்டு இருமுறை நடந்த சிலப்பதிகாரக் கருத்தகங்களில் திணை, சமயம், பாத்திரம், வரலாறு, மொழியியல், யாப்பு, காப்பிய அமைப்பு, நாகரிகம் முதலான பல நோக்கில் இப்பெருங்காப்பியத்தை தமிழ்த்துறை ஆராய்ந்துள்ளது எனவும், சிலப்பதிகாரத்தின் காலத்தை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து ஒரு முடிவு காண வேண்டும் எனவும் இம் முடிவு இலக்கியத்திலும் சமயத்திலும் வரலாற்றிலும் உள்ள சிக்கல்களை ஒழுங்கு படுத்தும் எனவும் கணவனின் துன்பத்தை முழுதும் தாங்கித் தன் துன்பத்தை அடக்கிக் கொண்டதே கண்ணகியின் கற்பில் அமைந்த தெய்வத் தன்மை எனவும், இத்தெய்வத்தன்மையை முதலில் எடுத்துக் காட்டியவர் கவுந்தியடிகள் எனவும் எடுத்துரைத்தார். திரு. ந. வீ. செயராமன் நன்றி கூறக் கருத்தரங்கு முடிவுற்றது.

அகம் வீடளிக்கும்

ப. இராமன், எம். ஏ.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
விவேகானந்தா கல்லூரி.

என்றுமுள தென்றமிழ் இலக்கண இலக்கிய வளமிகுந்தது. இதன் தொன்மை இலக்கணம் தொல்காப்பியம். எழுத்து, சொல், பொருள் என இலக்கணத்தை மூன்றாகப் பகுத்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐவகை இலக்கணமும் கூறினர் தொல்காப்பியர். இவ்விலக்கண வகையுள் பொருளிலக்கணம் தண்டமிழ் மொழியின் தனிச் சிறப்புரைக்கும். பொருளிலக்கணம் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் விளக்க எழுந்ததாம். இம்மூன்றனுள் அறம் பொருள் இரண்டும் புறத்துள்ளும், இன்பம் அகத்துள்ளும் அடங்குமாகலின் அகம், புறம் என்ற இரண்டாகவே பொருளை வகுத்தனர். அதனால் அகம் அல்லது அகப் பொருள் என்பது இன்பத்தைப் பற்றிக் கூறுவதாகும் என்றறிக,

இனி, அகமாவது என்னை? "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாதலின் அதனை 'அகம்' என்றார்", என நச்சினார்க்கினியர் விளக்கிப் போந்தார்.

இவ்வகவொழுக்கம் களவு, கற்பு என இருவகையான் இயலும். களவென்பது, "இருமுது குரவரால் கொடையெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக்கொள்ளாது இருவருங் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்தல்" என்றும், "கற்பு என்று சிறப்பித்துக் கூறப்படுவது வேள்விச் சடங்கோடே கூட ஒத்த குலத்தோனும் மிக்க குலத்தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன் ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளுமாகிய தலைவியைக்

கொடுத்தற்தரிய முறைமையினையுடைய இருமுது குரவர் முதலாயினர் கொடுப்பக் கோடற்றெழில்'' என்றும் நச்சினார்க்கினியர் நனி விளக்கினர்,

இக்களவு, கற்பினைப் பற்றிப் பரிமேலழகர், "அவை தம்மையே தமிழ் நூல்களோடும் 'பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மை பற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதிபயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறுகின்றார். அக் கைகோளிரண்டினுள்ளும் களவாவது, மூப்பு, பிணி, இறப்புக் களின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முளொப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றிப் பால் வகையால் தாமே எதிர்ப் பட்டுப் புணர்ந்து வருவது" எனக் கூறினர்,

களவுப் புணர்ச்சியானது, இயற்கைப் புணர்ச்சி, இடந் தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் எனும் நால்வகையான் நிகழும். இக் களவிற் கூடும் இருவர்க்கும், பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, நிறை, அருள், உணர்வு, திரு எனும் ஒத்த பண்புகள் பத்தும் இருத்தல் வேண்டும். இவற்றுள் தலைவனுக்குச் சில மிகினும் தலைவிக்குச் சில குறையினும் வழுவின்று.

" ஒன்றேவேறே யென்றிரு பால்வயின்
ஒன்றியுயர்ந்த பாலதாணையின்
ஒத்தகிழவனுங் கிழத்தியுங்காண்ப
மிக்கோனாயினுங் கடிவரையின்றே''

(களவியல்-63)

இருவர்க்கும் நிலம் வேறுபட்டபொழுதும் பல பிறப் பினும் ஒத்த அன்புடையராதலாலும் இனி வரும் பிறப்புக் களிலும் மிக்க அன்புடையராவர் என்னுஞ் சிறப்பாலும் பால்வரை தெய்வம் கூட்டக் கூடினர். இதனால் இன்து இயற்கைப் புணர்ச்சியாயிற்று. 'மிக்கோனாயினும் கடிவரை

யின்றே' என்றதால் தலைவன் தலைவியினும் சிலவாற்ருன் உயர்ந்தோனுயினும் வழுவன்று. இங்ஙனம் இம்மையிற் புதியராயினும் பழம் பிறப்புக்களில் கூடியவராகையான் பழையோரே. இதுபோது எதிர்ப்பட்டது முன் அன்பின் தொடர்ச்சியால் என்க.

'ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது' "வட கடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை தென்கடலிட்ட ஒரு சுழி சென்று கோத்தாற்போலவும், வெங்கதிர்க் கனலியும் தண் கதிர் மதியமும் தங்கதி வழுவித் தலைப்பெய்தாற் போலவும் தலைப்பெய்து ஒருவரொருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியராவர்" என்று இறையனர் அகப்பொருள் உரை விளக்கு கின்றது.

இவ்வாறு பால்வரை தெய்வத்தாற் கூட்டப்பெறும் இருவரும் உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும் பெறு வர். இவ்விருவகைப் புணர்ச்சிகளால் இருவர்தம் அன்பு கனிந்து செம்புலப் பெயல் நீர்போல நெஞ்சத்தை ஒன்ருந் தன்மையுறச் செயும்.

" பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
பிரிவரி தாகிய தண்டாக் காமம் "

என்ருற் போல் இருவரும் பிரிதலைச் சிறிதும் விரும்பார். இவர் கரவும் விரைவில் அலராக ஊர்க்கண் தோன்றி வெளிப்படும். இதனல் செவிலி, தோழி, பாங்கன் முதலான வாயில்கள் இருவர்க்கும் கடிமணங்கூடத் துணை நிற்பர். இங்ஙன் களவு கற்பிற்கோர் ஏதுவாகின்றதென்க.

இனி, கற்பியல் காண்பாம், "கணவனிற் சிறந்த தெய்வம் இல்லையெனவும் அவனை இன்னவாறு வழிபடுதல் வேண்டுமென வும் தலைமகளுக்குப் பெற்ருேர் கற்பித்தலானும், அந்தணர், சான்ருேர், அருந்தவத்தோர், விருந்தினர் முதலியோர் பால் இன்னவாறு நடந்து கொள்ளுதல் வேண்டுமெனத் தலைமகன் தலைமகளுக்குக் கற்பித்தலானும், நின் மனைவியை

இவ்வாறு பாதுகாப்பாயாக எனத் தலைவனுக்கு நின் கணவனுக்கு இவ்வாறு பணிசெய்தொழுகுவாயாக எனத் தலைவிக்கும் சான்றோர் கற்பித்தலானும் இவ்வதுவைச் சடங்காகிய கரணமும் கற்பெனப்படுவதாயிற்று" என்பர் நச்சினார்க்கினியர். கலித்தொகையும், "கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை எனக்கூறும்.

"பிரிவொடு புணர்ந்தது கற்பெனப்படுமே" என்றார் தொல்காப்பியர். இதனால் கற்பொழுக்கத்தில் தலைவன் பிரிவு நிகழும் என்பதொருதலை. 'தலைமகன் அறம், பொருளின்பங் களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும் தலைமகளைப் பிரிந்து செல்லும்' ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு பரத்தையிற்பிரிவு எனும் கற்பில் நிகழும் பிரிவு ஆறனுள் முதல் நான்கும் அறத்தின் பொருட்டும், பொருள்வயிற்பிரிவு பொருளீட்டுதற் பொருட்டும், பரத்தையிற் பிரிவு இன்பத்தின் பொருட்டும் நிகழ்வனவாம்."

திருவள்ளுவரும் களவியலில் ஏழு அதிகாரங்கள் வகுத்து உள்ளப்புணர்ச்சியும் மெய்யுறுபுணர்ச்சியும் விரித்து, கற்பியலில் பதினெட்டதிகாரங்கள் வகுத்துத் தலைமகன் பிரிவையும் தலைமகளின் ஆற்றாமையையும் பின் இருவர் கூட்டத்தையும் இனிது விதந்தோதினார். இங்ஙன் அகப்பொருள் இலக்கண இலக்கியங்கள் அனைத்தும் தலைமகன் தலைமகள் தம் மாசிலா அன்பையே புலப்படுத்துகின்றன. இவர் சேய்மையிடத்தும் பொழில் விளையாட்டு, புனல்விளையாட்டு, முதலிய நுகர்தற்கும் உரியராவர். இவ்வாறு கற்பொழுக்கத்தில் நின்று இறுதியில் 'சிறந்தது பயிற்றல்' கடன் என்பர்.

> " காமஞ் சான்ற சடைக்கோட் காலை
> ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே "
>
> (கற்பியல் - 192)

" தலைவனும் தலைவியும் உரிமைச் சுற்றத்தோடே கூடி நின்று இல்லறஞ்செய்தலை விரும்பிய மக்களோடே தமக்கு

முன்னரமைந்த காமத்தினையும் தீதாக உட்கொண்ட காலத்திலே அறம்பொருளின்பத்திற் சிறந்த வீட்டின்பம் பெறுதற்கு ஏமஞ்சான்றவற்றை அடிப்படுத்தல் யான் முற்கூறிய இல்லறத்தின் பயன். "நுகர்ச்சியெல்லாம் முடிந்தமையான் சான்ற காமம் என்றூர். வானப்பிரத்தமுஞ் சன்னியாசமும் ஏமஞ்சான்றவை என்றூர். எனவே இல்லறத்தின் பின்னர் இவற்றின்கண்ணே நின்று மெய்யுணர்ந்து வீடு பெறுப என்றூர். இவ்வீடு பேற்றினை இன்றியமையாது இவ்வில்லறமென்பது இதன்பயன். சிறந்த வீட்டின்ப வேட்கையில் துறத்தலின் காஞ்சியாகாது அகப்பொருட் பகுதியாம். தலைவன் வானப்பிரத்தம் செல்லத்துணியும் போழ்து தலைவியும் பொருள்களிற் பற்றற்றூளாய்த் தானும் துறவறத்தின் மேற்சென்று தலைவற்கு ஊழியஞ் செய்து அவர் முயற்சியில் துணையாவர். தோழி. தாய், பார்ப்பான், பாங்கன், பாடினி, இளையர், விருந்தினர் கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் அனைவரும் அப்பிரிவாற்றூது முன்செல்வர். அவர் துறந்துழித் தாமும் துறந்த நிகழ்ச்சி கோப்பெருஞ்சோழன் துறக்க அவர் உயர்நட்பின ரான பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தனர் எனப் புறச்செய்யுள் பகர்வதால் அறியலாம்,

சிறந்தது பயிற்றல் என்பதை நச்சினூர்க்கினியர் வானப்பிரத்தமும், துறவுமாகக் கருதுகின்றூர். இதனை அறத்தினது மனநிகழ்ச்சி என இளம்பூரணர் கூறுவர். செய்யும் அறங்களில் சிறந்து நிற்றலே இல்லறத்தின் எல்லா நிலைகளிலும் செயத்தக்கதென்க. இல்வாழ்வார் ஒருக்கால் துறந்தாலும் அகத்திலிருந்து உளத்தால் துறவு பூணுவதேயன்றிக் காடு நோக்கிச் செல்வதும், மனைவாழ்வையும், உலகத்தையும் துறப்பதும் அன்றென்க. புறக்கோலத்தால் காட்டும் துறவொழுக்கத்தினும் அகத்தில் துறத்தலே துறவாம். "முன்னர் இல்லற நிகழ்த்திய தலைவனும் தலைவியும் பின்னர்த் துறவறம் நிகழ்த்தி வீடுபெறுப" என நச்சினூர்க்கினியர் கூறும் உரையால் வீடு

பெறுதற்கு இல்லறத்தார் இறுதியில் துறவு பூணல் இன்றி யமையாத கருத்தாகின்றது. இக்கருத்து தொல்காப்பிய 'காமஞ்சான்ற' என்ற நூற்பாக் காட்டும் கருத்தாகத் தோன்ற வில்லை. நச்சினர்க்கினியர் இவண் வலிந்து பொருள் கொள்வ தாகவே தோன்றுகின்றது. எவர் வாழ்வின் குறிக்கோளும் இறுதியில் வீடுபேறடைதல் என்பதே வேண்டப்படுவதென்ருல் அக்குறிக்கோளை அடைதற்குத் துறவறம் ஒன்றே நெறியெனத் தொன்மைச் சான்ருேர் வகுத்திருப்பர். அங்ஙனமன்றித் திருவள்ளுவர் உள்ளிட்ட மெய்யுணர்ந்தோரும், இறைநிலை யுணர்ந்த அருளாளர்களும் இல்லறம் துறவறம் எனும் அறங் களில் நின்றே வீடுபேறடையலாம் எனத் தெளிவுறக் கூறிப் போந்துளார்.

தியாகச் செம்மல்

திருமிகு செஞ்சொற்பாவலர்
ப. சங்கரலிங்கம்

1 திருமுருகன் அருள்வடிவம்! உடலே எல்லாம்
தியாகமகள் தந்திட்ட விழுப்புண் கள்தான்!
அருள்வெள்ளம் இந்நாட்டில் புரண்டே ஓட
அவதரித்த அருள்ராம லிங்க வள்ளல்!

2 திருநாடு வாழ்வதற்கே பிறந்த சான்றோன்!
தேசியம் தழைப்பதற்கே தவழ்ந்த ஆன்றோன்!
பெருநாட்டின் படைத்தலைவன்! கால மெல்லாம்
போர்ப்பரணி முழங்குகின்ற புரட்சி நாவன்!

3 மண்ணாசை பொன்னாசை பெண்ணா சையை
மனத்தாலும் நினைக்காத முத்து! சொத்து!
தன்னாசை தன்மூச்சு தன்பேச் செல்லாம்
தன்நாட்டின் தாய்வீட்டின் வாழ்வு தானும்!

4 தென்னாட்டு நல்திலகன்! தெய்வீ கத்தில்
திரமிகு விவேகானந்த அண்ணல்! கன்னல்!
பொன்னாட்டின் புகழ்நாட்டின் வரலாற் றேட்டில்
புரட்சிசெய்த முதல்தலைவன்! கொள்கைக் குன்று!

5 வாளேந்தி தோள்தட்டி வைர நெஞ்சால்
விடுதலைப்பண் பாடிநின்றான்! வங்கச் சிங்கம்!
தாளொற்றி தமிழரினைக் கூட்டி இங்கே
தன்மானம் காத்திட்டான் பசும்பொன் தங்கம்!

6 மன்னாக அவன்பிறந்தான்! ஆனால் என்றும்
மண்குடிசை தனில்வாழ்ந்தான்! ஏழை மக்கள்
பொன்மனதில் குடியிருந்தான்! அவர்க்கே வாழ்ந்தான்!
புவியெங்கும் காணாத புகழ்த்த லைவன்!

7 பொதுவாழ்வில் புடம்போட்ட தங்கம்! சங்கம்!
பயன்கருதாத தொண்டுளத்தன் பசும்பொன் சிங்கம்!
எதுவரினும் எவர்க்குந்தான் தலையை தாழ்த்தா
எழில்மறவன்! எம்கோமான்! இதய வேந்தன்!

8 பொதுஉடமை பேசுவார்கள்! எழுது வார்கள்!
பொழுதெல்லாம் பிறர்க்கதுவே தமக்கென் றெண்ணர்!
பொதுஉடைமைக் கொள்கையேற்று சொத்தை
யெல்லாம்
பிறர்க்காக்கி வாழ்ந்திட்ட காரல் மார்க்சு!

9 வாழ்நாளின் பெரும்பொழுதை சிறையில் கண்ட
வண்டமிழர் நறுந்தலைவன்! சுடர் விளக்கம்!
நாளெல்லாம் தெய்வீகம் தேசீ யத்தை
நனிப்பரப்பி அணிசெய்த தென்றற் காற்று!

10 முத்தமிழில் முழங்கிடுவான் இடியே தோற்க!
முதிர்ந்தபெருங் கருத்துக்கள்! சித்தாந் தங்கள்!
கத்துகடல் அலையெனவே! நிற்கும் மக்கள்
கண்ணெதிரே நடமாடும்! மெய் மறப்பர்!

11 பட்டங்கள் பதவிகள் ஓடி வந்தும்
பட்டாதார் மிட்டாதார் நாடி வந்தும்
கிட்டவும் நெருங்காதே அவர்க்கோர் எட்டிக்
காயெனவே நின்றிட்டான்! காலம் வென்றான்!

12 பூமாலை தனையேற்கும் கழுத்து; தூக்கு
மாலைதனை ஏற்றிடவும் வேண்டு மென்று
பாமாலை நாமாலை பாடி யெங்கும்
பாரதிர பவனிவந்த தமிழர் செம்மல்!

சிலம்பு - பெருங்கதை ஓர் ஒப்பாய்வு

திருமிகு. இரா. காசிராசன், எம். ஏ.,
கேரளப் பல்கலைக் கழகம்.

(தொகுதி 68 பகுதி 3ன் தொடர்ச்சி)

மகள் மதன மஞ்சிகையை உதயணன் மகன் நரவாகதத்தன் காமுற்று, மறைவிதிப்படி தீ வலம் வந்து திருமணம் செய்து கொள்கின்றான். (பெருங் 5:4 – மதன மஞ்சிகை வதுவை) சிலம்பில் கணிகை மகள் மாதவி கற்புநெறியுடையள் எனக் காட்டப் பெறினும் முறைப்படி திருமணம் பெற்றாள் அல்லள்.

3:3:1 மணவிழாவில் அருகக் கடவுளை வாழ்த்துதல் (2:2:134 - 38) செயற்கை மரங்களைத் திருமணப் பந்தலில் நட்டு வண்ணம் தீட்டல் (பெருங் 2:2:139 – 148) பல்வகைக் கள்ளை மண நாளில் உண்டு களித்தல் (பெருங் 2;2:174 – 187) அந்தணர்க்குச் சோறு வழங்கல் (பெருங் 2:2:158 – 164) 45 - வகைத் தெய்வங்களை மந்திரத்தால் திருமணத்தன்று நிலைபெறச் செய்தல் (பெருங் 2;3:17) பார்ப்பன முதுமகன் அம்மியிடப்பட்ட மேடையில் அமர்ந்து அயிராணி வணங்கி அருந்ததியை வாழ்த்துதல் (2:3:27 - 37) உதயணன் (மணமகன்) மணமகள் தத்தையின் பாதத்தை அம்மியில் இருப்பித்து, மங்கலப் பொறியை இருவரும் வேள்வித்தீயில் தூவுதல் (2:3:78 - 90) அருந்ததியைக் காட்டித்தத்தையை மும்முறை வணங்கச் செய்தல் (2:3:120 - 124) மணமக்கள் நான்கு நாட்கள் விரதம் இருத்தல் (2:3:130) போன்ற திருமணச் சடங்குகள் சிலம்பு காணாதன.

3:3:2 மணப்பந்தல் மணமேடையின் அமைப்புமுறை (2:6:38 - 116) ‘பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க’ வென இக்காலத்து வாழ்த்துவது போலப் பதினாறு வகைச் செல்வப்பேறு குறித்தல் (2:4;6) நாவிதன் மணமகனுக்கு

முகச்சவரம் செய்தலும், மணமகட்கு புருவம் ஒதுக்குதலும் (2:4:161 - 182) அடிவினைக்கம்மியன் நகம்வெட்டுதல்' மணமகட்கு முகத்தில் மணப்பொடிதூவுதல், தொய்யில் எழுதுதல், (2;4:183 - 198) மணமகனை நீராட்ட 1008 கலசை நீரை யானை எருத்தத்திருந்து மகளிர் சுமந்து வரல் (2:5:9-16) அருகம்புல்லையும் வாகைத்தளிரையும் நெய்யில் தோய்த்து சான்றோர் மணமகனுக்கு நெய்யணி செய்வித்தல் (2:5:65 - 69). மணநாளில் 1008 தோழியர் சூழ்ந்து வர மணமகட்கு இக்காலத்துத் தாலி கட்டுவது போன்று நெற்றிப் பட்டத்தை மணமகன் அணிவித்தல் (3:22:275 - 76) போன்ற சடங்கு முறைகளும் சிலம்பில் காணப்படாதன.

3:4 குலமகளாக வாழ்ந்த சாங்கியத்தாய் கொழுநன் பிரிய ஒழுக்கங்கெட நடந்த செய்திக் குறிப்பு (1:36:149-56) அறுவகைச் சமயங்கள் பற்றிய குறிப்பு (1:36:242) காள சமணன், ஏனை ஐவகைச் சமயக் கணக்கரைச் சமயவாதத்தில் வென்று அவரைச் சாங்கிய சமணத்தைத் தழுவச் செய்தல் (1:36:245:54) நீராடு விழவில் அந்தணர்கட்குத் தக்கணைப் பொருள்களும், மணவேள்வி செய்வித்து மகளிரையும் வழங்குதல் (1:39:49 - 56). களிமகன் அந்தணரை இகழ்தல் (1:40:90 - 99). அந்தணர் சமயலானை உணவின் பொருட்டுத் துன்புறுத்தல் (1:40:133 - 39) முதலாய வழக்க ஒழுக்கங்களும் பெருங்கதையில் மட்டுமே அறியப்படுவன.

3:5 நீர் விழவில் துருத்திகொண்டு பனிநீர் தெளித்தல் (1:41:4 - 23) விழா இறுதி நீராட்டை ஆராட்டு என அழைத்தல் (1:42:2). ஆராடு தானம் ஐநூறுயிரம் பொன் வழங்குதல் (1:42:114) உதயணன் இடைச்சுரத்து வீழ்ந்து மடிந்த 'பத்திராவதி' யானைக்கு முறைப்படி நீர்க்கடன் செய்தல் (1:53:86 - 94), உதயணன் உணவு உண்பதற்கும் நல்ல நேரம் பார்த்தல் (1:57:77 - 80), எண்ணெய் தேய்த்துக் குளித்தல் (1:58:85 - 87) முதலானவும் சிலப்பதிகாரத்தில் அறியப்படாத பண்பாடாக அமைகின்றது.

3:6 ஊடிய கணிகை மகள் காலில் மைந்தர் வீழ்ந்து வணங்க, அக்கணிகை மகள் காலால் உதைத்தலால் அவள்

காலில் எழுதிய செம்பஞ்சுக் குழம்பைத் தலையணியாக மைந்தர் பெற்றனர் (1 : 35 : 202 - 210) தத்தைதான் உதயணனுக்கு அடிச்செருப்பு ஆகக்கடவேன் என்கின்ருள், (1 : 36 : 310) கனவில் ஊடிய தத்தையின் காலில் வீழ்ந்து வணங்குகின்ருன் உதயணன் (3 : 9 : 167 - 169) பெண்ணின் சூழ்ச்சியிலகப்படுதலின் உண்டாம் பிழை பல இவையென அறநூற்கள் வழித்தேர்ந்தும், மகளிரொடு மகிழ்ச்சியில் திழைக்குங்கால் காரியம் தெளிதல் நீதியன்று எனவும் உணர்ந்து தெளிகின்ற உதயணன் (3 : 14 : 31 - 35) பதுமாபதி ஊடல்தீர்க்க, அவள் காற்குழம்பு முடித்தலைக்கு அணியாமாறு வீழ்ந்து வணங்குகின்ருன். (3 : 14 : 137 – 138) இத்தகைய ஒழுக்காறுகள் சிலம்பின் கண் இல்லை.

3 : 7 நச்சுக்கனி போன்றது காமத்தின் இழிதகைமை எனக் காட்டுவதும் (2 : 20 : 1 - 23) நருமதை என்பாள் (பரத்தைமகள்) இழிந்தான் பாற் கொண்டுள்ள இழிகாம இயல்பினை எடுத்துக் காட்டுவதும் (1 : 35 : 116 - 142) சிலப்பதி காரத்தில் காட்டப்படாத செய்திகளாகும். இவ்வகையில் 'யசோதரகாவியம்' 'பெருங்கதை'யோடு ஒப்புமையுடையதாக அமைகின்றது.

3 : 8 : 1 சூழ்ச்சியால் பிரச்சோதனன் உதயணனைச் சிறைப் பிடித்தானுகிலும், பின்னர் திருந்தியவனை உண்மை நண்பனுக ஏற்றுப் பல சிறப்புக்கள் செய்ய உதயணன் அவன் நகர்க்கு தீயிட்டதன்றி, அவன் மகள் வாசவதத்தையையும் கவர்ந்து செல்கின்ருன். இத்தகைய அரசியல் நீதியைச் சிலப்பிலோ சங்க இலக்கியத்திலோ காண்டலரிது.

3: 8 ; 2 பெருங்கதையில் பேசப்படுகின்ற பகைவெல்லும் அரசியல் நெறியாகிய, மன்னனைச் சிறைப்பிடித்தல், அவன் நாடு கெடுத்தல், அவன் மகளைச் சிறைப்பிடித்தல் (1 : 43 :30 - 32) என்பனவற்றில் இறுதியாயது (அவன் மகளைச் சிறைப் பிடித்தல்) தமிழர் நெறியாகத் தோன்றவில்லை. இதுவும் சிலப்பதிகாரத்திலிருந்து பெருங்கதை தருகின்ற மாறுபட்ட பண்பாடாகும்.

3:8:3 தத்தையை உதயணன் கவர்ந்து சென்ற செய்தியை அறிந்தோர். அரசன் தீங்கு செய்வான் என அஞ்சிப் பிரச்சோதன மன்னனுக்கு அறிவிக்கவும் அஞ்சுகின்றனர். (1:46:333-47) வராகன் என்பவன் பிரச்சோதனனை எழுகோல் தொலைவில் நின்றே காணுகின்றான். (1:47:53-54) அரசர் கரிந்த பிணம் காண்டலில்லென அறிவுறுத்தப் படுகின்றது (2:19:43-44) படைக்கலன் இல்லாதநிலையில் பகைஞர்மாட்டுப் படைகொண்டு தாக்கத் துணிகின்றனர். (1:43), அமைச்சர், மறவர். அரசன், தேவியர் முதலானவர் கட்குச் சீவிதப் பொருள் வழங்கப் படுகின்றது (4:9) இவை முதலான அரசியல் நெறிசிலம்பில் காணப்படவில்லை. மட்டுமன்றிச் சங்க இலக்கியங்களிலும் இந்நெறிகாட்டப்படுவ தாகத் தெரியவில்லை.

3:9 இசைச்சன் வாயிலாக அக்காலமக்கள் வித்தையில் கொண்டிருந்த மிக்க நம்பிக்கை, பெண்கள் பற்றி இழிவுபடப் பேசுதல், சாதகம் எழுதப்பட்ட சாதகப்பட்டிகை பற்றிக் குறித்தல் (5:6:82) காதலர்கள் இதழ் நீர்ச்சுவை பருகுவதாகக் குறிப்பிடுதல் (3:113:163) காளவனத்துக் கபாலப்பள்ளி பற்றிய குறிப்பு, (1:36:240), அறுவகைச் சமயம் பற்றிக் குறித்தல் (1:36:230, 240) முதலான பெருங்கதை காட்டும் குறிப்புக்களனைத்தும், சிலம்பிற்குப் பிற்பட்ட காலச் சமுதாயச் சூழலை எதிரொலிப்பதாக அமைகின்றன.

......★......

பாவேந்தர் கவித்திறன்

திருமிகு. பேராசிரியர். வ. பெருமாள் அவர்கள்,
கோலார் தங்கவயல்,
மைசூர்.

(தொகுதி 68 பகுதி 3ன் தொடர்ச்சி)

உடல் நலத்திற்கு நல்ல இரத்தம் வேண்டும். நாட்டு நலத்திற்கு நல்ல செல்வம் வேண்டும் இரத்தம் உடலில் இருந்தால் மட்டும் போதாது. அது அனைத்து உறுப்புகளுக்கும் சீராகவும் முறையாகவும் பாய்தல் வேண்டும். அதைப் போலவே நாட்டின் செல்வம் ஒரே இடத்தில் ஒரு சிலரிடத்தில் மட்டும் குவிந்து கிடந்தால் போதாது. அது எங்கும்பரவி எல்லோர்க்கும் வாழ்வளிக்கும் வகையில் அமைதல் வேண்டும். இது பொருளாதாரத்தின் அடிப்படை உண்மை. ஒரு நாட்டில் ஒருவன் பெருங்கோடீசுவரனாகவும் இன்னொருவருன் பிச்சைக்காரனாகவும் வாழ்வதைப் பகுத்தறிவுள்ள எந்த சமுதாயமும் பார்த்துக்கொண்டு சும்மா இராது. பொருளாதாரக் கண்ணோடு பார்க்குமிடத்து ஏழை பணக்காரனிடையே ஏற்றத்தாழ்வும் வேறுபாடும் இருப்பது இயல்புதான். ஆனால் எந்த ஏற்றத்தாழ்வுக்கும் வேறுபாட்டிற்கும் ஓர் அளவு உண்டு.

ஒருவன் செல்வ வளத்தில் கோமானாக வாழ்வதற்கும் மற்றொருவன் வறுமையின் கொடுமைக்கு ஆட்பட்டு உழல்வதற்குமுரிய பொருளாதார–சமுதாயக் காரணங்களை விருப்பு வெறுப்பின்றி ஆராய்வது நன்மக்கள் கடமையாகும். உழைத்து உழைத்து உருக்குலைந்து ஒட்டிய வயிற்றுடன். குழிந்த கண்ணுடன் காட்சியளிக்கும் ஆயிரக்கணக்கான ஏழைமக்களைப் பாவேந்தர் காண்கின்றார். மறுபுறத்தில் பாலும் பழரசமும் உண்டு கொழுத்துவிட்டு உழைப்பாளிகளின் உழைப்பையும் பொருளையும் சுரண்டியும் ஏமாற்றியும் தந்திரமாகப் பிழைக்கும் உலுத்தர்களையும் எத்தர்களையும் நோக்குகின்றார். ஒருபுறம் ஓடப்பர்; மறுபுறம் உயரப்பர்.

ஓடப்பருக்கும் உயரப்பருக்குமுள்ள இடைவெளியை நீக்க ஒரே ஒரு வழிதான் உண்டு.

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா நீ.

இதுதான் பாவேந்தர் கூறியவழி. பாவேந்தர் பாட்டாளியின் நிலையை அறிந்தவர் மட்டுமல்லர். மிகத் தெளிவாக உணர்ந்தவர். அவர் எழுப்பிய உரிமை முழக்கம் வெறும் கவிஞர் குரலன்று. பாட்டாளி உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து உந்திக்கொண்டு எழுந்த உணர்ச்சிக் குரலாகும்.

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின்
தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெல்லாம் செய்துதந்த கைதான்யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கியமூச் செவரின்மூச்சு?

இக்கவிதை கற்போர் நெஞ்சிருக்கும்வரை நினைவில் நிலைத்திருக்கும் ஆற்றல்வாய்ந்தது. தமிழ்க்கவிஞர்களில் இத்தகைய பொருளாதாரப் புரட்சிக்கருத்தை உணர்ச்சியுடன் உரைத்தவர் பாவேந்தர் ஒருவரே.

கண்ணின் வழியாகச் சென்று கருத்தைக் கவர்வது அழகு. அழகைக் காண்பதற்கும் அறிவதற்கும் உணர்வதற்கும் சுவைப்பதற்கும் கண்கள் மட்டும் இருந்தால் போதா, கலையுள்ளமும் அழகு உணர்ச்சியும் வேண்டும். கல்லால் ஆகிய சிறந்த சிற்பத்தை இருவர் பார்க்கின்றனர். ஒருவனுக்குக் கல்லாகத் தெரிகிறது. மற்றொருவனுக்குக் கலைபாகக் காட்சி அளிக்கிறது

ஏன்? கல்லுள்ளம் கொண்டவன் கல்லைமட்டும்தான் காண்கின்றான் ஆனால் கலையுள்ளம் படைத்தவன் அக்கல்லிலுள்ள சிற்பத்தை உணர்கின்றான் அதன் அழகில் ஈடுபடுகின்றான். சிற்ப நுட்பத்தைக் கண்டு வியக்கின்றான். பேரின்பம் அடைகின்றான்.

அதுவே கலையின்பம்; அதுவே அவனுக்கு நிலை இன்பம். கல் உள்ளம் படைத்தவன் கீழ்நிலையில் விலங்கு போல் இருக்கிறான். கலையுள்ளம் படைத்தவன் மேல் நிலையில் மனிதனாக வாழ்கிறான். அவன் உள்ளத்தில் அரும்பிய அழகு உணர்ச்சி அவனை உயர்த்துகிறது; வாழ்விக்கிறது.

ஒரு கலையரங்கத்தில் பேரழகு வாய்ந்த மங்கை நல்லாள் மிகச் சிறப்பாக நடனம் ஆடுகிறாள். விலங்கு உணர்ச்சியால் உந்தப்பட்டவன் அவ்வரங்கிலுள்ள பெண்ணைமட்டும் காண்கிறான். ஆட்டத்தைக் காண வில்லை. கலையுணர்வும் அழகுணர்வும் கொண்ட மற்றொருவன் அம்மங்கையின் நடனத்தில் வெளிப்பட்ட அழகு, நுட்பம், மெய்ப்பாடு, உணர்ச்சி, இசை, அமைதி குறிப்பு, கலைநயம் முதலிய சிறப்பியல்புகளைக் கண்டு உணர்ந்து மகிழ்கின்றான். சுருங்கக் கூறுமிடத்து விலங்கு உணர்ச்சியுள்ளவன் ஆளைப்பார்த்தான். கலையுள்ளம் படைத்தவன், ஆட்டத்தைப் பார்த்தான். அழகு எங்கெங்கு இருக்கிறதோ அதைக் கருத்தில் கொண்டு சுவைக்கும் இயல்பு கலைஞனுக்கு உண்டு.

காலை இளங்கதிரவன், பரந்துவிரிந்த கடல், தெளிந்த நீர், நறுமணப், பூஞ்சோலை, மாலைக் கதிரவன், ஆலமரம், அதன் கிளைகளில் வாழும் கிளிக் கூட்டம் முதலிய இயற்கைக் காட்சிகளைப் பாவேந்தர் கண்டார். அவை யெல்லாம் வெறும் இயற்கைக் காட்சிகளாக மட்டும்

தென்படாமல் கலையுணர்ச்சியில் சிறந்து விளங்கிய பாவேந்தருக்கு அழகுக் காட்சியாகத் தென்படுகின்றன. அக்காட்சி கவிஞருக்கு இன்பம் பயந்ததோடு கவிதை இயற்றும் மன நிலையை உண்டாக்கிக் கவிதைக்குரிய கருத்துக் கருவூலத்தையும் அளித்தது. இதோ அக்கவிதை:

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன் – அந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எல்லாம்கண்ணில் தட்டுப்
பட்டாள்
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் – ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்.

மனிதன் படைக்கும் செயற்கை அழகைவிட இறைவன் படைக்கும் இயற்கை அழகு எத்தனையோ மடங்கு சிறந்தது; உயர்ந்தது; மேலானது. பாவேந்தர் அழகின் சிரிப்பைக் கண்டு இன்புற்றார். தாம்பெற்ற அழகியல் அனுபவத்தை (Aesthetic Experience) எல்லோர்க்கும் வழங்குகிறார் கவிதை அனுபவ அடிப்படையில் அமைந்தது என்பதற்குப் பாவேந்தர் இலக்கியமே சிறந்த எடுத்துக்காட்டு. தொடரும்.

தனக்குவமையில்லாத் தமிழ் முகில்

திருமிகு தமிழ்த்தொண்டன்
ஆ. ஆண்டியப்பன்

" கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானும் வேந்தர்க் கொளி " (தமிழ்மறை)

"சீமை ஐம்பத் தாறுதேசம் சி(சு)ற்றியே வந்தேன் -பள்ளி
செழிக்கும் ராமநாதபுரம் சீமையே சீமை

மன்னன் பொன்னுச் சாமிநிதம் செய்யுந் தர்மத்தால் - பள்ளி
மாதமூன்று மழைபெய்யும் மண்டல மெல்லாம்

நலமாகப் பொன்னுச் சாமி ராச்சிய மாண்டதால் – பள்ளி
நாமடைந்த நன்மைகளைச் சொல்லுறேன் கேளு "

(பள்ளுப்பாடல்)

அசைந்து வரும் தென்றலிலே தவழ்ந்து வந்தது தேமதுரத் தமிழோசை. அறவாழ்வும், புறவாழ்வும் ஓங்கு புகழ் துலங்க இலங்கிய சேதுபதிச் சீமையின் கண் முகிழ்த்து நின்றது. பாடல்கள் உடம் போடு இயைந்த உயிரனையது மட்டுமல்ல, அம்மக்களது மனத்துயரோடும் மா மருந்தாகவும் இலங்கியது.

உலகிலே நல்லறங்களை நாளும்வளர்த்து நற்புகழ் நிறுவிய சான்றோர்களும்; அருஞ்செயலாற்றி பெரும்புகழ் எய்திய ஆன்றோர்களும்; அறத்தாலும், மறத்தாலும் பொன்றுப் புகழ் ஈட்டி நின்ற வல்லோர்களுமே பாராட்டுக்குரியவர்களாக விளங்குகின்றனர். அத்தகு சீர்பெரும் செம்மல்களையே மக்களாகச் சுட்டுகிறது பொய்யாமொழி.

சேதுநாடு நீர்வளமற்ற நாடு. ஆனல் 'கருஞ்செய்' என்ற நிலவளம் செழிந்த நன்னாடு; இரப்போர்க் கெல்லாம் இல்லை

யென்ஞது வாரி, வாரி வழங்கிய வண்டமிழ்க் குரிசில்கள் தவழ்ந்த திருநாடு; பயிர்த்தொழிலைத் தமது உயிர்த்தொழிலாகக் கொண்ட உழவர். பெருமக்கள் மல்கிய பொன்னுடு; அஞ்சாமையைத் தனது அணிகலனுகக் கொண்டு பிறர்க்குரியராய்ப் பொதுநலம் பேணி, முத்திறத்தால் அருந்தொண்டாற்றிய அடலேறுகள் நிறைந்த நாடு; ஆங்கு வீரர்களாகவும், மக்கள் தலைவர்களாகவும், குறுநிலமன்னர்களாகவும் பெரும் புகழ்ஈட்டி நின்றவர்கள் சேதுபதிச் செம்மல்கள். சங்க காலத்திற்குப்பின் வடவேங்கடம் தென்குமரிவரையிலும் பொன்றுப் புகழுடன் விளங்கியவர்களாவர். தன்னரசாக, தன்னுரிமை பெற்ற தனிப்பெரும் சிற்றரசாக விளங்கிவந்தது சேதுபதிச் சீமை. வரலாற்றிலே பெரும் புகழ் ஈட்டி நின்ற தன்னேரில்லாத்தானைத் தலைவன் மாமன்னன் ரெகுநாதசேதுபதியவர்களுக்குப் பின் 1710–ஆம் ஆண்டிற்குப்பின்–மிகக்குறுகியது சேதுநாடு. குறுநிலமாகியது (சிறுசமீனுக) என்பதை 'வரதாப்யுதம்' என்ற தமது வடமொழிநூலில் சான்று காட்டியுள்ளார். தஞ்சையில் அரியணை ஏறிய திருமலாம்பாள் என்ற நாயக்கர் குல அரசியார் என்பதை வரலாற்றுத் திறனுய்வாளர்கள் அறிவர்.

அத்தகு பழம் பெருஞ் சிறப்பினைப் பெற்ற தானைத் தலைவர்கள் மல்கிய சேதுபதிகுடியிலே 19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில், இலக்கியம் புகழும் கடையேழுவள்ளல்களுக்கிணையாக மற்றும் ஒரு கொடைமறவனுக விளங்கியவர் மேதகு பொன்னுச்சாமித்தேவரவர்கள். அருங்கலைகள் ஆய்ந்து தமது 20ஆம் அகவையிலே சேதுநாட்டின் அமைச்சராக அரசவையில் வீற்றிருந்த அடலேறு ஆவர்.

அத்திருமகனுரின் வாழ்விலே மலர்ந்த அறச்செயல்களையும், புறச்செயல்களையும், அருள்தமிழ் மொழிகாத்த பண்பினையும்; அவர்தம் நெஞ்சவழியால் உற்றுழி உதவியும், புலவர்க்கு உறு பொருளீந்த கொடைச் சிறப்பினையும் வியந்தும், நயந்தும் பாடினர். பாடிப்பாடி மகிழ்ந்தனர். மனக்குறைவு இல்லாது வாழ்வாங்கு வாழ்ந்து வந்த சேதுநாட்டுமக்கள்.

மேழிச் செல்வம் கொழிக்கும் அத்திருநாட்டிலே நற்றமிழ் மணம் நாளும் செழிக்கச் செய்த செந்தமிழ்க் களஞ்சியமாம்; இலக்கிய இன்பத்தைப் போற்றிப் புரந்த சொற்கொண்டல் புலவர்க்குக் கொடையால் கர்ணனைமிஞ்சிய தமிழ் முகிலாகத் திகழ்ந்த அப்பெருமகனுரை வண்டமிழ்ப் புலமைசால் தண்டமிழ்ப் புலவர்களும் பாடினர். பாராட்டினர்.

" அன்னசத் திரங்கட்டி ஆலயங் கள்கட்டி
அளகா புரிபோ லரண்மனை யுங்கட்டித்
தன்னிக ரில்லாத பொன்னுச்சாமி மன்னன்
சாரும்பூஞ் சோலையைச் சேருவோமே "

(1869 - வேட்டைக்காதல்)

புலன் நாஉழவர் போற்றிப் புகழும் பேற்றினைப் பெற்ற மேதகு பொன்னுச்சாமித் தேவரவர்களை சமயக்குரவர்களும் பாராட்டினர். கடியலூர் உருத்திரம் கண்ணனுர் பாடிய பட்டினப்பாலைப் பாடலைக் கேட்டு பதினறுநூருயிரம் பொன் பரிசளித்த காவிரிக்குக் கரை கண்ட கரிகாலனைப் போன்று விதவையின் உரிமையை நிலைகாட்டி பொன்ருப்புகழ் நிறுவிய வித்தகனும் மேதகு. பொன்னுச்சாமித் தேவரவர்களைப் பாராட்டாத புலவர் நாக்கள் இல்லை எனலாம்.

விதவைகள் தத்தெடுக்கும் உரிமை காக்க உயர்நீதி மன்றங்கள் மூலமாக பல ஆண்டுகள் வழக்காடி முதன் முதலாக அவ்வுரிமையை நிலைநாட்டியவர். மேதகு. பொன்னுச்சாமித் தேவரவர்களே யாவர். அப்பெருமகனுரின் அரிய அறிவுத்திறனையும், ஆட்சி வன்மையையும் மேல் நாட்டு அறிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

" இராசாங் கத்தினை ஈரோப் பியரும்
பராவுறச் செலுத்தும் பண்புகொள் பார்த்திபன்"

என்று தொண்டவராயசாமிகள் வழங்கிய திருக்கோவையார் முதலாம் சிறப்புப்பாயிரம் சான்று காண்பாம்.

பேரறிஞர் 'சான்புரூசு நார்ட்டன்', 'சோடி மெயின்' என்ற அற்றைய ஆங்கிலேயே வழக்குரைஞர்களும், மாவட்டத் தண்டல் நாயகமாம் 'லிரிஞ்சு' (1860-67) ஆகியோர்கள் பாராட்டுவழங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவராவர்.

மண்ணெங்கும் தமிழ்மணக்க அருஞ்சங்கம் நிலைநாட்டி; காலத்திற்கும், கன்னித்தமிழுலகிற்கும் பெருமை தேடித்தந்த பெருமனச் செம்மல், தென்னவர், தெண்ணிலா, வள்ளல், மாறன் பாண்டித்துரைத்தேவரவர்களை பாருலகிற்கீந்த அருங்கலை விநோதன் அமராபரணனுமாவர் மேதகு பொன்னுச்சாமித் தேவரவர்கள்,

இன்றைய நவீன போக்குவரத்துக்கள் இல்லாத அக்காலத்திலே 'திராவிடகீர்வாண முத்திராசாலை' என்ற திருநாமத்தில் அச்சகம் நிறுவினர் முகவையிலே கரலத்தாலும் கடற் கோட்கலாலும் அழிவுற்ற சங்கச் செல்வங்களான பழம் சுவடிகள் போக எஞ்சிய ஓலைச்சுவடிகளைப் பேணி, நாடித் தேடிக் கொணர்ந்து அழகு ஒளிரும் வண்ணம் அச்சிட்டு நூல்களாக்கினர் அவ்வச்சகத்திலே வேண்டுவோர்க்கெல்லாம் அந்நூல்களை இலவசமாகவே வழங்கினர் மேதகு. பொன்னுச்சாமித்தேவரவர்கள்.

அந்நூல்களை அவ்வாறு அச்சியற்றுவிடில் இன்று நமக்குக் கிடைத்திருக்கும் இற்றைய சங்க நூல்கள் சிலவும் உறுதியாகக் கிடைத்திருக்காது என்று துணிந்து கூறலாம். காலத்தால் செய்த அப்பெருமன்னரின் அரிய பணிகள் நாடுள்ளவரை, நம்தமிழ் ஏடுள்ளவரை மறையாது. மங்காது.

கம்பராமாயாணம், திருக்குறள் பரிமேலழகருரை, திருக் கோவையாருரை, சேதுபுராணம், இலக்கணக்கொத்து, இலக்கணவிளக்கச்சூறாவளி, தருக்கசங்கிரகம் முதலிய இலக்கிய, இலக்கண நூல்களும்; நூலாய்வின் நுண்வடிவங்களை 'பலகவித்திரட்டு' என்று கருத்துக்களஞ்சியமாக தொகுத்து நூல்களாக்கிய பெருமைக்குரியவரும் பொன்னுச்சாமித்தேவ ரவர்களேயாவர்.

ஆயுர்வேத முறைகளில் தேர்ச்சிபெற்ற மருத்துவராக விளங்கிவந்த அப்பெருந்தகை 'வைத்தியசார சங்கிரகம்' என்ற தமது அனுபவ வைத்திய முறைகளை நூலாகவும் வெளியிட்டுள்ளார்.

பெரும் காப்பியமாம் இராமாயணம் வழங்கிய கவித் திலகம் கம்பனுக்குதவியவர் வள்ளல் சடையப்பர் போன்று, தெள்ளுதமிழ்ப் புலவர்க்கு உற்றுழிஉதவி, புதிய நூல்கள் வெளியிட உறுபொருளீந்தவர் மேதகு பொன்னுச்சாமித் தேவரவர்களேயாவர் என்பதை நன்றிப்பெருக்குடன் எடுத்துக் காட்டியுள்ளனர். தாங்கள், தங்கள் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் வாயிலாக.

''தானக் கையார் புனலால் நனையாதன கையுமில்லை''

''மதிக்கணை நெறித்தபுரு வச்சிலையின் மாட்டிக்
கதிக்கும் அடையாரிலக்கங் காட்டித் துதித்தெவரும்
அஞ்சப் புவிபுரக்கும் அண்ணல் பொன்னுச் சாமிமன்னன்
தஞ்சத்தை யாரடையா தார்'' (தனிச்செய்யுள்)

''ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்'' (புறம்)

என்றபடி பழுமரம் நாடிச்செல்லும் பறவைகள்போல் நாடெங்கினுமிருந்து புலவர்களும் புரவலர்களும் அணி, அணியாய் முகவை வந்து பரிசில்பெற்றுச் செல்வர் கற்பகச் சொற்கோ பொன்னுச்சாமித் தேவர்பால்.

யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர், தில்லையம்பூர் சந்திரசேகர கவிராயர், திருவாடுதுறை தாண்டவக் கவிராயர், பழநி மாம்பழக் கவிராயர், மகாவித்வான் தியாகராச செட்டியார், வடமொழி வல்லுநர் ராசு சாத்திரிகள், அஷ்டாவதானி கிருட்டிண ஐயங்கார் ஆகியோர் உதவிபெற்றுயர்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவராவர்.

பரிசில் பெறுதல் பொருட்டுப் புகழ்பாடியவரல்லர் அற்றையப் புலவர் பெருமக்கள். நற்பண்புகளுக்கு உறைவிட

மாகத் திகழ்ந்த சான்றோர்களையும், நல்லறம்பேணிய அறிஞர் பெருமக்களையும், முத்தமிழ் மணம் குன்றாது, குறையாது அறநெறிகளை அறிவுறுத்திய அடலேறுகளையுமே பாடினர். காப்பியம் யாவும் கற்றுத்தெளிந்த அறிவுச் சுடர்மணிகளை, அறிவொளி காட்டிப் பல்லாற்றானும் பொன்றாப் புகழுடன் விளங்கிய பண்பாளர்களையுமே பாராட்டினர் என்பது வெள்ளிடைமலை.

'முப்புரமெரித்த சிவபெருமானுக்கு ஞான உபதேசம் செய்தவர் முருகக்கடவுள்போல், புலமைசால் அறிஞர்களுக்குப் புதுமையான பொருளுரைகள் வழங்கியவர் பொன்னுச்சாமித் தேவரவர்களே'' என்றும்,

"புலவர்களின் கலி இருளைப் போக்குவதற்காகவே மலர்ந்த முகத்துடன் தோற்றமமைந்த பொன்னுச்சாமித் தேவர் முன்நிற்க களங்கம் இருப்பதால் நாளும் கடலில் மூழ்கி, மூழ்கி எழுகிறான் சந்திரன்" என்றும்,

"கைமாறு கருதாது மேகத்தினும் மேம்பட்டு விளங்கி வந்த பொன்னுச்சாமித்தேவரவர்களின் புலமைக்கு கலைமடந்தையும் நாணினள்" என்றும்,

"பொதியையில் சென்று மறைந்துள்ள குறுமுனிவன் பொன்னுச்சாமித்தேவரவர்களின் கவித்திறமைக்கு வெட்கியே" என்றும் கற்பனைக் கவிகளைத் தீட்டியுள்ளனர். வறுமைப்பிணி நீங்கி மகிழ்ந்த பெருமைக்குரிய புலவர் பெருமக்கள் என்பதைச் சான்று கூறும் தனிச்செய்யுள்கள் எண்ணிலடங்கா! எடுத்துரைப்பின் விரியுமன்றோ!

இலக்கியத் திறனாய்வு பெற்ற சொற் கொண்டல் பொ[illegible]மித் தேவரவர் இருபொருளமைந்த சிலேடைப் பேச்சுக்[illegible] விற்பன்னராகவும் விளங்கினார். அவர்தம் பொருளுரைகள் புலவர்களுக்கும் புதுமையாகவே இருந்தன என்று எடுத்துக்காட்டியுள்ளனர்.

"கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்"

புலவர்கள் நன்மதிப்பிற்கும், பரிசுகட்கும் உரியவராகவே இருந்தனர். அரைகுறைப் புலவர்கள் பொன்னுச்சாமித்தேவர் முன் நிற்க அஞ்சுவர்.

> "கார்முகிலைக் காதலித்து மயில்கள் செல்லும், அழகு நிறைந்த சகோரப்பறவையோ மதியினை நாடிச் செல்லும், என் செவிகள் சால்போடு சிறப்புப் பொருந்திய மன்னன் பொன்னுச்சாமித்தேவரின் சொற்சுவை நாடும்" என்று எடுத்துக்காட்டியுள்ளார் மதுரைத் திருஞான சமபந்தசாமி மடத்துத் தம்பிரானவர்கள்.

தமிழ் வளம் காட்டி, தனித்தமிழால் உணர்வூட்டி தமிழ துயர் நீங்கிடத் தமிழ்ச் சான்றோர் பலரைக் கூட்டி அவர்தம் கருத்தூரத் துணிவு கொண்டு செயற்கருஞ் செயல்கள் செய்த சேதுநாட்டின் சிந்தனைச் சிற்பி. சித்தாந்தச் செம்மல், கருங் கொண்டல் நாணும்படி அருங் கொடை வழங்கிய வள்ளல் பொன்னுச்சாமித்தேவரவர்களை நினைவு கூறும் போது அவர்தம் அருமைச் சோதரராம் அருட்பணிச்செம்மல் மேதகு. துரைராஜா என்ற மன்னர் முத்துராமலிங்கச்சேதுகாவலர் நம்முன் நிற்பர்.

தாய்த்தமிழின் இலக்கியத் தனிச்சிறப்பினைப் போற்றி புரந்த, மாண்புறு ஆட்சி ஓச்சிய கொற்றவர், பைந்தமிழைப் பழுதறப் படித்தறிந்த பார்புகழும் விற்பன்னர், கற்றவர் திறனறிந்து அவர் வேண்டும் பொருள் வரையாது வழங்கிய வள்ளியோன், மன்னர் சேதுகாலலர்பால் எந்நாளும் புலவர் குழாம் சூழ பொலிவு பெற்று விளங்கி வந்தது சேதுபதிச்சீமை.

தனிச்செய்யுள் சிந்தாமணி, வள்ளிமணமாலை, சரசசல்லாப மாலை, முருகரனுபூதி, மும்மணிமாலை, நீதிபோதவெண்பா, பிரும்மகைவல்லியம், பாலபோதம், பிரபாகரமாலை முதலிய அரிய இலக்கிய நூல்களும்; காயகப்பிரியா, ரசிசரஞ்சனம்

என்ற வடமொழிப் பாக்கள் நிறைந்த இசை நூல்களும் நூலாய்வில் நுண்மாண் நுழைபுலம் பெற்ற அப்பெருமக னூரால் ஆக்கிப்படைத்தளித்த அருந்தமிழ்க் கருவூலமாம்.

" புகழேந்தி யப்பேர்ப் பொருட்குரிய னென்னப்
புகழேந் திறமிதென்பர் பொற்பின் — திகழுநய
சீலன்முத்து ராமலிங்கச் செம்மல்புனை வள்ளிமண
மாலைதனை நன்காய்ப வர் "

என்று புகழேந்தி இயற்றிய நூலினும் வள்ளிமணமாலை மேம் பட்டது என்று பாராட்டியுள்ளனர் நூலை ஆராய்ந்த புலவர்கள்

முக்காலத்தும் அறம்பேணி; அயராது, தளராது அருங் கொடை வழங்கிய பெருங்கொடைவள்ளல் மன்னர் முத்துராமலிங்கச்சேதுகாவலர். புலவர்களின் இன்மை இருளைப் போக்கும் கதிரவனாகவும்; வறுமை சூழ்ந்த புலவர்களின் காரிருளைப் போக்கி வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கிய வள்ளியோன் பொன்னுச்சாமித்தேவரவர்களைத் திங்களாகவும் போற்றிபுரந்தனர் மக்களும் மாண்புறு தமிழ்ச்சான்றோர்களும்.

" முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். " (பொய்யாமொழி)

தமிழ்ப் பயிர் தழைத்தோங்கவும் சைவநெறி வளர்ந் தோங்கவும் தண்ணளி கொண்டு எண்ணரும் பணிகள் செய்த ஏந்தல்கள் இருபெரும் நெஞ்சுத்துடிப்புப் போன்று தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்க் கலையையும் வளங்குன்றுத் தன்மையில் பேணி, பல்லாற்றானும் பொன்றுப் புகழ் நிறுவிய சேதுகுலச் செங்கதிர், நடுவுநிலைமையால் நல்லாட்சி புரிந்த தண்டமிழ்க் கிழவர் வழித் தோன்றல்கள் பல்லூழி வாழ நல்வழி இறைஞ்சுவோமாக.

வாழ்க தமிழ்! வளர்க கலை!! உயர்க தமிழ்மரபு!!!

★

தமிழ்த் தொண்டனும்
தண்டமிழ் மன்னனும்

[புறநானூற்றுச் சுவடிதனைப் படி எடுத்து அச்சேற்றும் படியான நிலைமையதைப் பெற்றுக் களித்திட்ட பாண்டித் துரைத் தேவரவர் தண்டமிழ்த் தொண்டன் தமிழ்த் தாத்தா அவர்கட்கு எழுதி விடுத்ததிது]

"தங்களால் லோகோபகாரமாய் அரிய நூல்கள் அச்சிடுவதாக எடுத்துக்கொள்ளப்பட்ட நன் முயற்சிக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்ய எப்பொழுதும் ஆவலுற்றிருப்பவனாதலின் அதற்குரிய நற்சமயம் அறிவிக்கக் கேட்டுக்கொள்ளும் தங்கள் பாண்டித்துரை"

14—11—1894.

கலிவெண்பா

1 திங்கள் புரையுந் திருவதனச் செல்வியொரு
பங்கினமர் பெம்மான் பதமலரே-துங்க

2 முடிக்கணியாத் தாங்கி முதுபரவை வேலிப்
படிக்கணியா யென்றும் பலநூல்-வடிக்கும்

3 உளத்தார்க் கொருநிதியோ யோங்கு புகழ்மேய
வளத்தா லுயர் குடந்தை மன்னித்-துளக்கரி

4 நேமிநா தன்மருகி நேயமனையா ளோடுவாழ்
சாமிநா தைய தகுநண்ப-மாமுனைவ

5 மன்னியபாண் டித்துரைபல் வந்தனஞ்செய்
நன்னிருப மீதாங்......... [தின்றெழுதும்

6 காமாரி தந்தவிளங் காதலனே ராய்த் தமிழின்
மாமாரி பெய்துலகை வாழ்விப்போய்.........

7 பயன்சிறிய தேனும்பனையளவாக் கொள்வர்
நயன்றெரிவோ ரென்ற உண்மைநாடி-முயன்றிதுபோ

8 தைந்நூறு ரூபா வனுப்பினே ன தேற்றருள்வாய்
மெய்ந் நூறுரீஇ யொழுகும் வித்தகா-மைந்நூறி

9 ஆமாலையிற்சுவையுண் டாக்கும் புறப்பொருள்வெண்
பாமாலை யச்சிற் பதிவு செயும்-மா முயற்சி

10 ஊறிகந்து முற்ற லுறுவிப்பா னோங்குகவான்
ஆறுகந்த சென்னி யருள்." (17-12-1894)

வழங்கியவர். கவிஞர். ப. சங்கரலிங்கம்.

" கால்டுவெல் "
சமயத்தொண்டரா? தமிழ்த்தொண்டரா?

புலவர். சி. திருஞானசம்பந்தன்,
சிவகங்கை.

பண்டையோர் வாழ்க்கை நிலையை ஆராயப்புகுந்த ஒருவன், பண்டையோர் வாழ்க்கையின் உண்மைநிலையை உரைக்கவேண்டுமேயன்றி, தம் விருப்பு வெறுப்பைத் தம் ஆராய்ச்சியுரையுள் திணிக்கலாகாது.

" காய்த லுவத்த லகற்றி ஒரு பொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே — காய்வதன்கண்
உற்றகுணந் தோன்ருத தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்ருக் கெடும் "

என்பது முனைப்பாடியார் பாடிய அறநெறிச்சாரமாகும்.

ஆராய்ச்சியாளனுக்குப் பண்டைய வாழ்க்கை நிலை தற்காலத்துக்குப் பொருந்துமா பொருந்தாதா என்ற கேள்வி எழக்கூடாது. எப்படி வாழ்ந்தார்கள் என்பதைக் காண்பது தான் குறிக்கோளாயிருக்க வேண்டும்.

ஆராய்ச்சியாளர் ஒருவரின் கருத்தைச், சற்று ஆய்வோம். அவர் யார் என்பதும் தெரியவேண்டுமன்ருே? " மாறுகொளக் கூறல் " என்ற குற்றம் மலிந்து காணப்படுகிறது அவர்தம் நூலில்.

தமிழ்த் தொண்டு செய்த பார்ப்பனர்கள் யாருமே உரையாசிரியர் என்ற நிலைக்கு மேல் உயரமுடியவில்லையென்றும், கி. பி. 9ம் நூற்ருண்டுக்கு முன் தமிழ் நூலே தோன்றியிருக்கமுடியாதென்றும் கூறிய கால்டுவெல், ஒப்பிலக்கணத்தைக் காண்போம்.

வடமொழியாளர் ஏற்ற சொல்லினும், ஈந்த சொல்லே மிகுதியெனப் புகழ்ந்தார்; புகழட்டும்.

தமிழ்மொழி எவ்வகையானும் வடமொழியின் துணையின்றிஇயங்க வல்லது என்பதை விளக்கிய கால்டுவெல்,

" தமிழ் என்ற சொல்லே வடமொழியிலிருந்து வந்தது " என்றார். திராவிடம் என்பது வடசொல். திராவிடம் என்ற வடசொல் திரவிடம் ஆகி, திரவிடம் திரமிடம் ஆகி திரமிடம் திரமிளம் ஆகி திரமிளம் தமிளோ என்று ஆகிப் பின் தமிழ் என வழங்கியதாம். என்ன வியப்பு ?

'பொருநை' என்னும் தமிழ்ச் சொல் தாமிரபருணி என்ற வடசொல்லின் பிற்பகுதியாகத் தோன்றுகிறதாம்.

நாம் எந்த நோக்கமாக இந்நாட்டுக்கு வந்தோம் என்ற உள்ளுணர்வு, அவருக்கு இடைவிடாதிருந்தமையை, அவர் தம் ஒப்பிலக்கணத்தின் ஒவ்வொருவரியிலும் காணமுடிகிறது.

அதற்கு சான்றாக அவர் தம் மொழிகளை அடியிற்காண்போம்

" தமிழில் எந்தச் சொற்களும் இல்லையென முடியாது. எச்சொல்லையும் தமிழில் ஆக்க முடியும். அமைக்க முடியும். ஆனால் வடசொற்களுள் ஒன்றே ஒன்றிற்குத்தான் குற்றஞ் சொல்லாத வகையில் நேர் தமிழ்ச்சொல் அமைக்க முடியாது. அச்சொல் விக்கிரகம் (Image) என்பது. அச்சொல்லும் அதன் கருத்தும் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்கட்கும் கொள்கைகட்கும் புறம்பானவை. பார்ப்பனர்களால் புராணக்கருத்துக்களோடும் " விக்கிரக ஆராதனை முறை " என்னும் உருவ வழிபாட்டோடும் இச்சொல்லும் கருத்தும் தமிழ்நாட்டினுட் புகுத்தப்பட்டன " என்றார்,

வி. கோ. சூரியநாராயணசாத்திரியார் எழுதிய " தமிழ் மொழி வரலாறு " என்னும் நூலில் காணப்பட்ட சிலவரிகள் மேற்கண்ட கால்டுவெல் கருத்துக்கு மறுப்பாகத் தோன்றுகின்றன. வி. கோ. சூ. அவர்களின் கருத்துக்களை அப்படியே ஈண்டு தருகிறோம்.

" சில்லோர் தமிழ்ப் பாஷைக்குள்ளே விக்கிரகம் என்பதைக் குறிப்பதற்குத்தக்க தனித்தமிழ்ச்சொல் இல்லை

யெனவும், அதனல் தமிழர்கள் விக்ரகாராதனம் செய்பவர் களல்ல ரெனவுந் துணிந்து கூறுவாராயினர். அவர் கூற்றுப் படிவம், வடிவம் என்ற தமிழ்ச்சொற்களாற் போலியென்று ஒதுக்கப்படுவதாயிற்று" (தமிழ்மொழி வரலாறு வி.கோ சூ. 90)

கதவு செய்ய வேண்டு மென்ருல் மரத்தை வாங்கிப் பட்டையைச் செதுக்கிப் பயன்படுத்துகிறேம். ஆனல் மரம் நிலத்தில் வேரூன்றியிருந்தபோதே பட்டையின்றியே வளர்ந்தது எனக் கூறிவிடலாகாது.

'மனிதன் குரங்கிலிருந்து பிறந்தான்' என்று ஆய்ந்து கூறினர் டார்வின். குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்று கூறுதற்கு வெட்கி அதை மறைத்துக் கூறினல் அது உண்மையான ஆராய்ச்சியாகாது.

இதைச் சொல்வது எற்றுக்கு எனின், விக்கிரக வழிபாடு பண்டு தமிழகத்தில் இருந்தது. இப்போதும் அவ்வாறே வழிபட வேண்டுமா? வேண்டாமா? என்ற பிரச்னே வேறு, இதற்காக உருவ வழிபாடு தமிழர்தம் கொள்கையன்று என்று கூறக்கூடாது. அது சரியான ஆராய்ச்சியாகாது.

திருக்குறளைச் சிறிது பார்ப்போம். திருவள்ளுவர் கூறும் கடவுள் உருவம் உள்ள கடவுள். உருவமிருந்தால்தான குணங்கள் இருக்க முடியும். குணங்களிருந்தால் அதனுடைய பொருளுமிருந்தாகவேண்டும். திருவள்ளுவர் எண்குணத்தான், மலர்மிசையேகினன், இறைவன் என்று ஆண்பாலாகவும், உருவமுள்ளவனுகவுமே கூறுகிருர். தாள் என்றும் அடி யென்றும் கூறுகிருர்.

" கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅ ரெனின் "

" மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார் "

முடியின்றி அடிமட்டுமா யிருக்கும்?

" சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானேர்க்கும் ஈண்டு "

என்ற குறள் மூலம் திருவள்ளுவர் உருவ வழிபாட்டை ஒப்புக் கொள்கிறார். சிறப்பு என்பது திருவிழா.

பூசனை — நாடோறும் நடைபெறும் பூசை. உருவமின்றேல் எப்படிப் பூசையும் விழாவும் நிகழும்? உருவ வழிபாடு ஆரியரிடமிருந்து வந்த வழக்கம் என்றார். ஆரியர் நம்நாட்டுக்கு கிறித்துவுக்கு முன்னரே வந்து விட்டனர். என்றாலும், தமிழர் தம் தொன்மை நிலையைக் காட்டும் கண்ணாடியாகத் தொல்காப்பியம் ஒன்றுதானே உளது. அந்நூலில் பார்ப்போம்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்று கூறிய தொல்காப்பியர் இன்னும் பேய், கூற்றுவன் பற்றியும் கூறிய தொல்காப்பியர்,

"மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"

என்று கொற்றவை வணக்கத்தையுங் கூறிய தொல்காப்பியர்.

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்று கூறிய தொல்காப்பியர்,

உருவ வழிபாட்டுக் காதாரமாக ஏதேனும் உரைத்தாரா என்று தெரிய நூலுட் செல்வோமாக! பொருளதிகாரப் புறத்திணையியலில் ஒரு நூற்பா.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நல்கல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்
என்றிருமூன்று மரபின் கல்லொடு புணர"

நடுதற்குரிய கல்லைத் தேர்ந்தெடுத்தல், நடுதற்கு ஆரம்ப விழாச் செய்தல், அக்கல்லை நீராட்டடல், நடுதல், கல்லுக்கு மரியாதை செலுத்துதல், படைவீரர்கள் இறந்த வீரனின் ஆவி அதில் குடிகொண்டிருப்பதாக எண்ணி வாழ்த்தி வணங்கல் என்று இறந்த வீரர்கட்குக் கல்நட்டு வணங்கி வந்த வழக்கத்தை ஆறு வகையாகப் பிரித்துக் கூறுவது தொல்காப்பியம்.

இறந்த வீரனின் நினைவாக அவன் இறந்த இடத்தில் கல்நட்டினர். பிறகு பெயரும் எழுதினர் பின்னர் புகழும் பொறித்தனர். கடைசியில் வீரனைப் போலவே சிலை செய்தனர். இவ்வழக்கமே பின்பு பத்தினிப் பெண்களுக்கும், தெய்வங்களுக்கும் உருவம்வைத்து வழிபடுமாறு செய்து, சிற்பக் கலையைச் சிறக்கச் செய்தது. திராவிட நாகரிகமெனப் போற்றப்படும் மெகஞ்சதொரோ அரப்பாவில் சிவபெருமானின் சிலைகள் கிடைத்துள்ளன.

தொல்காப்பிய நூற்பாவுக்கேற்ப, கண்ணகிக்குச் சிலை செய்து கோவில் அமைத்ததைக் கூறும், சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தில் காட்சிக்காதை, கால்கோட்காதை, நீர்ப்படைக் காதை, நடுகல்காதை, வாழ்த்துக்காதை வரந்தருகாதை என்று காதைகளின் பெயர்கள் அமைந்துள்ளன.

இவ்வாறிருக்க, கால்டுவெல் ஏன் உருவவழிபாடு தமிழருக்கு ஒவ்வாது என்றார் எனின், அவரின் குறிக்கோள் சமயத் தொண்டுதான் தமிழ்த் தொண்டிற்காகத் தன்னாட்டி லிருந்து வரவில்லை. எனவே அவர் குறிக்கோள் நிறைவேற விக்கிரகம் என்ற சொல் பயன்பட்டது.

பிரித்தாளும் சூழ்ச்சியில் வல்ல வெள்ளையர்கள் வட இந்தியாவில் இந்து-முஸ்லீம் பிரிவினையை உண்டாக்கினர்.

இங்கே மொழி குறித்து திராவிடரும், ஆரியரும் சிண்டைப்பிடித்து சண்டை செய்து கொண்டதால் தன்சமயம் உயரக்கூடுமென்று உன்னியே இவ்வாறு இவர் ஆராய்ச்சியாக எழுதியிருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது.

இல்லாவிடில் வடமொழி – தென்மொழி பற்றி முன்னுக்குப் பின் முரணிய செய்திகளை எழுதுவது என்னே?

குடகு மொழியைப்பற்றி கால்டுவெல் அவர்களின் வேடிக்கையான ஆராய்ச்சியைப் பார்ப்போம்.

"குடகு மக்கள் பண்டைக் காலத்திலேயே மேற்குமலைத் தொடரில் குடியேறிவிட்டனர் என்பது அவர்களிடையே இன்றும் ஒரு பெண் பல ஆடவர்களை மணந்துகொள்ளும் வழக்கம் இருந்து வருவதனுற் புலப்படும். இவ்வழக்கம் பண்டைத் திராவிடர் வழக்கமாகும்."

கால்டுவெல் இதோடு விடவில்லை. பிற்காலத்துத் தமிழர் இவ்வழக்கம் வேறு மரபினர்தம் கலப்பினுல் வந்தது என்று கூறினும் கூறலாமென்று எண்ணி, பார்ப்பனர் பழக்க வழக்கங்கள் இன்றளவுமிவர்களிடைப் புகவில்லை என்று அழுத்திக் கூறுகிருர்.

இதன்மூலம் ஒரு பெண்ணை நாலைந்துபேர் விரும்பி மணம் புரிவது திராவிடர்க்கே உரித்தான பரம்பரைப் பழக்கம் என்று பழந்தமிழர் மீது பழிபோடுகிருர். தொடையையும் கிள்ளித், தொட்டிலையும் ஆட்டும் இவர், தம்கூற்றுக்கு சான்று காட்டவில்லை. 9ஆம் நூற்றுண்டுக்கு முன் தமிழ் நூல்கள் தோன்றியதாகச் சொல்லமுடியாது என்றவர் எப்படிக் காட்டுவார்?

'பர்னல்' என்பவர் எழுதியதாக இவர் குறிப்பிடுகிருர். ஆனுல் மற்ற ஆராய்ச்சியாளர்களின் கூற்றை மறுத்த கால்டுவெல் பர்னலை மறுக்கவில்லை. எனவே இவருக்கும் அது உடன்பாடுதான்.

ஒப்பிலக்கணத்தை மொழிபெயர்த்த அப்பாத்துரையார் அடிக்குறிப்பில் (Burnells specimens of South Indian diabets No 3) என்று கூறுகிருர்.

பர்னலுக்கு என்னதான் ஆதாரம் உண்டோ தெரியவில்லை.

ஒரு ஆண் பல பெண்களை மணந்ததாகப் படித்திருக்கிறேமேயன்றி, ஒரு தமிழ்ப்பெண் பல ஆண்களுக்குப் பத்தினிப் பெண்டிராக வாழ்ந்ததற்கு நூற்சான்று இல்லை. இது ஆய்தற்குரித்து

திராவிட மொழியினமாகிய திருந்தா மொழியுள் ஒன்ருகிய 'துதம்' என்ற மொழி பேசுவோர் அபினிப் பழக்கத்தாலும், பெண்கள் பல கணவர்களைக் கொள்ளும் முறையாலும், பெண் குழந்தைகளைப் பிறந்தவுடன் கொல்லும் முறையாலும், இம்மொழி பேசுவோர் 700 பேரே உள்ளனர் என்று தம் கருத்தாகவே கால்டுவெல் கூறுகிருர். இதுவும் ஆய்தற்குரித்து,

ஒப்பற்ற மொழித்தொண்டு புரிந்த கால்டுவெல் தொண்டு புரியவந்த காரியத்தை - அதாவது அவர்கள் குறிக்கோளை மறந்து விடவில்லை.

தமிழ்த்தொண்டு முழுவதிலும் சமயத்தொண்டு விரவியுள்ளது.

சமயத்தொண்டை முன்னிட்டுத் தமிழ்த்தொண்டு செய்தாராயினும், அத்தமிழ்த்தொண்டும் போற்றற்பாலதே.

...✻...

தாயுமானவரின் பராபரக்கண்ணி

திருமிகு. பு. மு. சாந்தமூர்த்தி, எம். ஏ.

தொகுதி. 68. பகுதி. 3ன் தொடர்ச்சி

2. உவமைகள் உணர்த்தும் இறைமை

அழகான எளிய வாழ்வியல் உவமைகளைக் கையாண்டு தம் உள்ளக் கருத்துகளை வெளிப்படுத்துவதே புலவர் உள்ளம். இயற்கை, காதல், வீரம் போன்ற நிலைகளை உவமை வாயிலாகச் சிறப்பித்தல் போலவே, இறை இலக்கியங்கள் கடவுள் தன்மையையும் அருள் வன்மையையும் உவமைகளால் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. அத்தகைய உவமைச் சிறப்பியல்புகளைத் தாயுமானவரின் பராபரக் கண்ணிகளிலும் சிறப்பாகக் காணலாம்.

> 'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல'வெனக்
> கென்றிரங்குவாய்' என்னும் கண்ணி,

கன்றுக்கும் தாய்ப் பசுவுக்கும் உள்ள உறவு முறை நெருக்கத்தைக் காட்டி உவமையின்பம் தருகிறது. இறைவன் தாயாகி அருட்பால் ஊட்ட வளர்கின்ற ஒன்றுதான் உயிர்க் கன்று. இரக்க நிலை எண்ணும்போதெல்லாம் கன்றெண்ணிப் பால் சுரக்கும் தாய்ப்பசுவே நினைவில் வரல் இயற்கையுமாகும்; இனிமையுமாகும்.

மானிடன் எடுக்கின்ற கணக்கற்ற பிறவிகளில் அவ்வுயிர் படுகின்ற வேதனைகளைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. பிறவிப் பெருங்கடல் நீந்த வேண்டும் என்ற நினைப்பின்றேல், பிறவிக் கடலில் உயிரின் தோற்றம் துன்பத்திற்குரியதே. இத்துன்ப நிலையை எண்ணுங்கால்,

> 'ஆழித் துரும்பெனவே அங்குமிங்கும் உன்னடிமை
> பாழில் திரிவதென்ன பாவம்'— என்று பாடுகிருர்

தாயுமானவர். கடலில் ஒரு சிறு துரும்பு எப்படியோ, அப்படியே பிறவிகளுள் உயிர்' என்னும் தன்மையைக் கூறுகிறார்.

தாம் பெற்றிருக்கும் தனிமை நிலையில் தம்மைப் பேணிக் காக்க இறையருள் தம்பால் இல்லையே என எண்ணும்போது அடியார், தாய்மையை எண்ணிப் பார்க்கிறார். தாயன்பிற்கும் அணைப்பிற்கும் இணையில்லையாதலால்,

'தாயிலார் போல் நான் தளர்ந்தேன்,'
'அன்னையிலாச் சேய்போல் அலக்கணுற்றேன்'

என்று தாய் உவமை தருகிறார்.

குற்றமற்ற உள்ளன்பில் அழுந்தி இருப்பவரே ஆனந்தம் அடையமுடியும் என்பதும் பராபரக் கண்ணியின் தத்துவம். உள்ளொன்றும் புறமொன்றும் இருந்தால் ஆனந்தம் அடைய வாய்ப்பே இல்லை. ஆதலால்தான் 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றார் வள்ளுவச் சீராளரும். இத்தன்மையை நினைக்கின்ற பராபரக் கண்ணியாரின் நெஞ்சம் 'கொழுந்தில் வயிரமென' என்ற உவமை தருகிறது. மரக்கொழுந்தில் வயிரம் அடங்குதல்போல என்பதால் மென்மையான கொழுந்தெனினும் வயிரம்போன்ற தன்மை அங்குண்டு என்னும் உறுதி நெஞ்சம் பெறப்படுகிறது.

குற்றம் நீங்கிய உள்ளம் தூயஉயர்நிலை அடைந்து விடுகிறது. இந்நிலையைத் தத்துவம் 'பரிபக்குவநிலை' என்கிறது. இந்நிலையடைந்தவர்க்கே இறைவனது திருவருட்பேறு கிடைக்கும். 'பற்றும் பயிர்க்குப் படர்கொழுந்துபோல' என்பது இங்கு உவமையாகிறது. கதிர்பிடிக்கும் பயிரினுக்கே விளையும் கொழுந்து நன்கு விளங்குவதுபோல என்பது உவமைப் பொருளாகிறது. கதிர் பிடிக்கவில்லை எனில், கொழுந்து முழுமைபெறாது; பரிபக்குவம் இல்லையெனில் அருளும் வாய்க்காது.

இறைவனை அறிதற்கு எது தேவை? அவனது அருள் தான் தேவை. அவனருள் இல்லாமல் இறைவனை அறிவதாகக்

காட்டிக்கொள்வது பொய்யேயன்றி உண்மையாகாது. இதனை எண்ணும் கண்ணியார், 'வான்காண வேண்டின் மலையேறலொக்கும்' என்றுவமை தருகிறார். தரையிலிருந்து வானைப்பார்க்க முடியாது; ஆதலால் மலைமேல் நின்றால் வானைப் பார்க்கலாம் என்றெண்ணி மலையேறுவதைப் போன்றதே இறைவனை அறிவதாகக் காட்டுகின்ற பாவனையும். வெறும் பாவனைகளால் பயனில்லை என்பதிதன் கருத்து.

நிலையாகக் காணப்பட்டுப் பின் அழிகின்ற உலகை இல்லையென்றும் சிலர் தீரத்துடன் கூறுவராம். இத்தெளிவில்லாத் தீரத்தை உவமையால் விளக்கவந்தவர் காலவழுவமைதி என இலக்கணத்தார் கூறுவதையே எடுத்துக் காட்டுகிறார். 'வருவான் வந்தேனெனல் போல்' என உவமை அமைகிறது. இனி வருவான் ஒருவன் துணிவு பற்றி வந்தேன் எனக்கூறுதல் உண்டு. உவமையில் இலக்கணக்கூறும் இடம் பெறுதல் பாராட்டிற்குரியது; சுவைத்தற்குரியது.

இறைவன் மௌனத் தாயாக வந்து திருவருளைத் தருகிறான். இதற்குக் காரணம் காண்கிறார் கண்ணியார். 'அடியேனை மௌன நிலையில் வைப்பதற்கென்றுதானோ?' என வினவுகிறார். மௌனத்திலேயே அருள் வாய்க்கப் பெற்ற பின் பேச்செதற்குத்தேவை? ஆதலால்! 'வாய்பேசா ஊமையென' என்று ஊமைத்தன்மை உவமையாகிறது. இதனால் மௌனநிலையில் அருள்பெறும் பெருமை விளக்கம் பெறுகிறது.

இறைவனுடைய எண்குணங்களும் உயிரும் இரண்டறக் கலந்தபின் அமைவதோ இறையின்பப் பெருநிலை. அத்தன்மையடைந்தாரது சிறப்பை அளவிட்டுச் சொல்லமுடியாது. இறைமையும் உயிரும் ஒன்றுபட்ட அளவில் உள்ளாரை உவமையால் சொல்லக்கூடுமோ என்கிறார்; உவமையும் ஒன்று இடம் பெறுகிறது. 'அப்பும் உப்பும் போன்ற' என்ற உவமை நீருடன் சேர்ந்த உப்புத் தன் தன்மையால் யாவற்றையும் நீருக்குத்தந்து நிகராதல் போல் என்றமைகிறது.

பாழான மனம் தனக்குப் பகைவர் இல்லாத காரணத்தால் பெருங்கூத்தாடுகிறது. ஆனாலும் இக்கூத்தாடுவதால்

மனத்திற்கு என்ன ஊதியம் (இலாபம்) கிடைத்துவிடும் என்று பார்த்தால் ஏதுமில்லை என்பதே விடையாகிறது. ஆதலால மனம் தன்னைப் பெரிதாகக் கருதிக் கூத்தாடுவதில் எவ்விதமான பயனுமில்லை என்பது உட்கருத்தாகிறது. இதற்கு 'வாதுக்கு வந்தெதிர்ந்த மல்லரைப் போல' என உவமை அமைகிறது. வாதுக்கு வந்தெதிர்ப்பதால் மல்லர்க்கு எவ்விதமான பயனும் இல்லை என்பதே இதன் பொருளாகும்.

பல்வேறு காலங்களில் சூழல்களில் மனம் தன் முயற்சிகளில் தோல்வியடையும். தோல்விகளால் பெரிதும் தளர்கின்ற மனம் தனக்குள் வாதாடத் தொடங்கும். ஆனால் அதனாலும் எவ்விதமான பயனையும் பெறமுடியாது. தோல்வியால் துவள்கின்ற மனத்திற்கு உவமை கூறவந்தவர், 'சூதாடுவார்போல் துவண்டு துவண்டு' என்கிறார். சூதாடுவான் நிலை ஆட்டத்தில் அவன் தோல்வியுறும் போது தெளிவாகக் காணலாம். உலகியல் நிகழ்ச்சி உவமையாகிறது.

இவ்வாறே மனம் தான் செய்கின்ற வஞ்சகங்களால் தானே பலமுறை துன்புறுகிறது. துன்புறும் போதெல்லாம் அத்துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வஞ்சமனம் துள்ளுகிறது. இதனை உணர்த்த விரும்பிய தாயுமானவர், கொட்டினால் நெருப்புக் கொள்ளிபோல் எரியச் செய்வதாகிய கொள்ளித்தேள் கொட்ட அதனால் துடிக்கின்ற பேய் பிடித்த குரங்கின் செயலை உவமையாக்கிக் 'கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்' என்கிறார் தேளுக்குக் கொள்ளியும் குரங்கிற்குப் பேயும் அடைமொழியாதல், வஞ்சகங்களின் வன்மை மேலும் வன்மையுறல் கூறும்.

இறைவன் திருவருளைப் பெறாமல் வெறும் புத்தகங்களை மட்டும் படிப்பதால் எவ்விதமான பயனுமில்லை. இறைவன் அருள்வழியே வேண்டுவதன்றி நூலறிவு வேண்டுவதில்லை. நூல்மட்டும் கொண்டு அருள் நாடுதல் இயலாதது என்பதைச் சிறந்த உவமையால் வெளிப்படுத்துகிறார். 'நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பரர் போல' என்பதுவமை. பருத்திவைத்து நூலெடுத்து அந்த நூலால் ஏணி செய்து விண்ணேற முயல்வது எவ்வளவு முடியாதோ - பைத்தியக்காரத்

தன்மையோ அவ்வளவு நூலறிவை அருள்பெறல் என்பதும், உலகில் உள்ள கலையறிவு நிலைகள் எல்லாம் எதற்கும் பயனற்றவையே என்பதற்குத் தரும் மற்றோர் உவமம் சிறுபிள்ளை விளையாட்டுப் பொருளாக விளங்குகிறது. 'சின்னஞ் சிறியார்கள் செய்தமணற் சோற்றையொக்கும்' எனச் சிற்றில் கட்டி மணற் சோறாக்கி விளையாடும் இளமை நினைப்புத் தருகிறார். இறைவன் திருவருளின்றிப் பிறர் சொன்னவற்றையே திரும்பத் திரும்பக் கூறுவதாலும் எவ்விதமான பயனுமில்லை இதற்கும் மிகவும் பொருத்தமான உவமையே தருகிறார் மன்னியர் கேட்டதையே சொல்லும் கிளிபோல் என்பதே உவமை.

உள்ளத்து நினைவுகள் தோன்றி உடனே மறைகின்ற தன்மையை எண்ணும் போது. 'நீர்க்குமிழி போல' என் நினைவு வெளியாய்க்கரைய என உவமை தந்து நிலையாமையைச் சிறப்பிக்கிறார். இறைவனைத் தேடியோடும் மனம் தொடக்கத்தில் மிக விரைவாகச் செயல்படுகிறது. ஆனல், நாளாக நாளாகத் தன்முயற்சியில் தளர்வதால் மனம் ஓய்ந்துவிடுகிறது. இதற்கு இளமை நினைப்புத்தோன்ற, 'ஆடியோய் பம்பரம் போல்' எனப்பம்பர உவமை தருகிறார்.

நல்லவர்களின் சொற்பொருளை மேன்மேலும் படித்தாராய்ந்தால் மெய்யுணர்வுவாய்க்கும். இதனை எடுத்துக் காட்டுவமையால் விளக்கும் தாயுமானவர், 'கல்லையெறிந்தால் மூடியிருக்கும் பாசிவிலகி நல்ல நீர் தோன்றும்' என்பதைக் கூறுகிறார். 'கல்லெறியப் பாசிகலைந்து நன்னீர்காணும்' என்பதே எடுத்துக்காட்டுவமை.

இவ்வுலகவாழ்வில் யாவரும் சேகரித்தலைக் காணவேண்டுமென்று தமக்கொரு விருப்பம் உண்டு என்கிறார். இவ்விருப்பம் 'முன்னாள்மெய்ஞ் ஞான முனிவர் தவமீட்டுதல் போல்' எனப் பழைய கால உண்மைச் சிவஞானத்தைத் தேர்ந்த முனிவர்கள் தவத்தினைச் சேகரித்தல் போல் என்னும் பொருளில் விளக்கம் பெறக் கூறுகிறார். திருவருட்செல்வம் அடையப்பெற்றவர்கள் மெலிவடையாச் சமநிலையில் (கேடுவரினும் பெருக்கம்வரினும்)

நன்னிலையிலேயே வாழ்வார்கள். இதற்குச் 'செங்கைத்துலாக் கோல்போல்' என்பது தவிர வேறெதுவும் உவமையாக முடியாது. 'செங்கை' அடைமொழியின் பொருளாழம் உணரத் தக்கது. 'கேடும் பெருக்கமும் இல்லல்ல' என்பது திருக்குறளென்றோ!

பேரானந்த தீபமென இறைவன் முன்னிற்கும்போது, பரிபக்குவப்பட்ட ஆன்மாக்கள் கரைந்து போகும் இயல்பு கூறவந்தவர் 'கர்ப்பூர உண்டை போல கரைய' என்கிறார் அண்டம் முழுவதும் தானேயாகிப் பரவியுள்ள இறைவன் திருவருள் மேம்பாட்டால் எல்லா அண்பங்களும் இறைவன் உருவேயாகும். இதனை உணர்த்த விரும்பிய தாயுமானவர், 'கண்டவடி வெல்லாம் கரைக்கின்ற அஞ்சனம் போல' என்ற உவமை தருகிறார். எதன்மீது பூசப்பெற்றாலும் உள்ள வண்ணத்தை நீக்கித் தன்மயமாக்கும் தன்மையுடையது அஞ்சனம். அதுபோல இறையருள் என்கிறார்.

உலக மாயையினால் கட்டுப்பட்டு உழல்வார்க்கு எவ்வளவு அறிவுரை கூறினாலும் மாயை நீங்காது என்பது சமயக் கோட்பாடு. இக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுவமையால் மிக எளிமையாக விளக்குகிறார். மண் சுவரைக் கழுவினால் மண்போய்விடாது என்னும் பொருளமைய 'வைத்த சுவரலம் பின் மண்போமோ' என்னும் தொடரமைக்கிறார். சொற்களில் பயனற்ற சொற்களை நீக்கிச் சொல்லின்ப முடிவான இறைமையை அறியாதவரைக் கூறவந்தவர், நெல்லில் பதர் போல நிற்பார்' என்கிறார்.

'பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கள் பதடி எனல்'

என்னுங் குறட் பதடியை இங்குச் கருதிப்பார்க்கலாம்.

சிலர் எக்காலத்தும் தம்மையே பெரிதாக நினைத்திருப்பர். அத்தகையோர் சிவனடியார்க்குக் மனங்கசிந்து தவி செய்யாராம்; அந்த இரக்க மனம் இல்லாருடைய நினைவுகளை நினைக் கின்றவர், 'கன்றை உறைகாலி கதைகாண்' என்றுவமை

தருகிருர் ஆன்மாக்களின் நெஞ்சத்தாமரையில் தண்ணிய அருள் தோன்ற அருள் செய்யும்தாயே இறைவன். இதனை 'விண்கருணை பூத்ததெனை' என்னும் உவமைத் தொடரால் சிறப்பிக்கின்ருர்.

எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் திருவருளுக்காக உயிர் மனத்தளர்ச்சியுற்று நிற்கிறது. இத்தளர்ச்சியைக் கூறவந்தவர் 'தாயிருந்தும் பிள்ளை தளர்தாற்போல்' என்றும் உவமை தருகிருர். தாயில்லாப் போதுள்ள தளர்ச்சியைவிடத் தாயுள்ள போதுள்ள தளர்ச்சி இன்னும் அவலத்தைக் கூட்டுவதாகும்.

சிலர் வாயினுலேயே பலவும் பிதற்றக் காணலாம். அவ்வாறு பிதற்றிப் பேய்க்குச் சமமானவர்க்கு எவ்வித இன்ப நிலையும் விளையாது. இவ்வுண்மையைக் கூறும்போது, 'வாயாற் கிணறு கெட்டவாறே போல்' எனக் கிணறு தூர்ந்துவிடும் தன்மையை உவமையாகக் கூறுகிருர்

பிறவாமை எப்பொது நிகழும்? நாளும் கிளி போலப் பேசிப்பேசிக் காலங்கடத்தும் வாழ்வை மாற்றி வார்த்தைகளை நீக்கி மௌனம் பூண்டிருப்பவர்களே எக்காலத்தும் பிறவாதவராவார். இதனைக் 'காச்சச் சுடர்விடும் பொற் கட்டிபோல்' என்று புடம் போடுங்கால் ஒளிவிடும் பொற் கட்டியை உவமையாக்குகிருர். 'சுடச்சுட ஒளிரும் பொன் போல்' என வள்ளுவமும் கூறுகிறது.

பாழான மனம் ஒடுங்கிவிட்டால், யாவும் வெட்டவெளியாக விளங்கும் என்பதை 'பட்டப் பகல் போல' என்னும் உவமையால் விளக்குகிருர். பாழான மனம் ஒடுங்கிவிட்டால், உள்ளத்து இருள் நீக்கி வெண்மைப் புகழே எஞ்சும் வெண்மைப் புகழ் நினைப்பு வருங்கால் 'பகல்' உவமையாதல் இயற்கையேயாகும்.

இங்ஙனம், பராபரக்கண்ணி உவமைகள் உலகியல் தன்மைகளையும் பொருள்களையும் தம்மகத்தே கொண்டு இறைத்துவத்தை எளிமையாக்கக் காணலாம். ★

திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும் வரலாற்று அமைப்பும்

இரா. கோதண்டராமன்,
எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (மொழியியல்)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

பகுதி 1

திராவிட மொழிகளில் வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்த மாறுதல்கள் பலவாகும் அவற்றுள் வல்லொலிகளின் முன் நிகழ்ந்த மெல்லொலிகளின் வீழ்ச்சியும். அதன் விளைவாக உயிர்களிடையே தனித்து நின்ற அலையொலி (Voiced-Sound) யாகிய பகரம் வகரமாகத் திரிந்து நிற்றலும், உம்மைக் கிளவியின் உகர வீழ்ச்சியும், ஈற்றிலும், வல்லொற்றுக்களின் முன்னும், மெல்லொற்றுக்களின் முன்னும் நிகழ்ந்த —*அய், —*இய் ஆகிய விகுதிகள் யகரமெய்யை இழந்து நிற்றலும், மெல்லொலியின் பின் நிகழும் அலையொலித்தன்மை (Voiced Character) யாகிய வல்லொலிகள் அம் மெல்லொலிகளாகத் திரிந்து நிற்றலும், வரலாற்று நிலையில் இரட்டித்து நிகழும் வல்லொலிகளும் மெல்லொலிகளும் சில குறிப்பிட்ட நிலைகளில் ஒடுங்கி ஒற்றையாகி நிற்றலும் குறிப்பிடத்தக்க மாறுதல்களில் சிலவாகும்.

பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் இம்மாறுதல்களைப் புலப்படுத்தும்.

1. தமிழில் வல்லொலிமுன் நிகழும் மெல்லொலி கன்னடத்தில் வீழ்ந்துபடும் நிலை காணப்படுகின்றது (HKL. பக்கம் 83)

தமிழ்	கன்னடம்	தமிழ்	கன்னடம்
கூந்தல்	கூதல்	உறங்கு	ஒறகு (oRagu)
அழுந்து	அழ்து	பருந்து	பர்து
இருந்து	இர்து	விருந்து	பிர்து (birdu)
மருந்து	மர்து	கூண்டு	கூடு (gu : du)
தோண்டு	தோடு	பொருந்து	பொர்து
வேண்டு	பேடு (be : du)	தாங்கு	தாகு (ta : gu)
உணங்கு	ஒணகு (onagu)	விளங்கு	பெளகு (belagu)
முழங்கு	மொழகு molagu	அடங்கு	அடகு (adagu)
குரும்பை	குருபெ (kurube)	வீங்கு	பீகு (bi : gu)
நீங்கு	நீகு (ni : gu)		

தமிழகத்தின் வடமாவட்டங்களில் நிலவும் பேச்சுத் தமிழில் பன்மைப் பெயர்களிலும், வினைமுற்றுக்களிலும் வல்லொலிமுன் நிகழும் மெல்லொலி நெல்லை மாவட்டதுப் பேச்சுத் தமிழில் வீழ்ந்துபடுகின்றது.

வடமாவட்டங்களில் வழங்கும் பேச்சுத் தமிழ்	நெல்லை மாவட்டத்தில் வழங்கும் பேச்சுத் தமிழ்	பொருள்
அ. செடிங்க	செடிக	செடிகள்
கொடிங்க	கொடிக	கொடிகள்
ஆடுங்க	ஆடுக	ஆடுகள்
மாடுங்க	மாடுக	மாடுகள்
காயிங்க	காயிக	காய்கள்
நாயிங்க	நாயிக	நாய்கள்
ஊருங்க	ஊருக	ஊர்கள்
தேருங்க	தேருக	தேர்கள்

	வாலுங்க	வாலுக	வால்கள்
	காலுங்க	காலுக	கால்கள்
	ஆளுங்க	ஆளுக	ஆட்கள்
	தேளுங்க	தேளுக	தேள்கள்
ஆ.	வந்தாங்க	வந்தாக	வந்தார்கள்
	இருந்தாங்க	இருந்தாக	இருந்தார்கள்
	செய்தாங்க	செய்தாக	செய்தார்கள்
	போவாங்க	போவாக	போவார்கள்
	அடிப்பாங்க	அடிப்பாக	அடிப்பார்கள்

தெலுங்கிலும் இத்தகைய மெல்லொலி வீழ்ச்சி காணப் படுகின்றது.

மூண்டு > மூடு (mu : du) 'மூன்று',
ஏம்பதி > ஏபதி (e : badi) 'ஐம்பது' (HGT. பக்கம் 355);

எனும்பொதி > எனுபொதி (enubodi) 'எண்பது'
(ஷை பக்கம் 354);

தபுன்று (tabunvu) < * தம்புன்னு 'தம்பி'
(ஷை பக்கம் 367)

2. தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் உயிர் களிடையே தனித்து நிகழும் அலையொழியாகிய பகரம் வகரமாகத் திரிந்து நிற்கின்றது.

தமிழ் : அளபு > அளவு, துணிபு > துணிவு,
முடிபு > முடிவு

கன்னடம் : வேம்பு > * வேபு > வேவு (be : vu)
பாம்பு > * பாபு > பாவு
காம்பு > * காபு > காவு
*நாம்பு > * நாபு > நாவு 'நாம்|நாங்கள்'

(பேச்சுத் தமிழில் நாம்ப 'நாம்' என்று வழங்குவதைக் கருத்தில் கொள்ளவும்)

தெலுங்கு : இருபாதி — (iruba:di) > இருவாதி–'இருபத்து'
(HGT. பக். 352)
இருபது > இரவை, அறுபது > அறவை

3. உம்மைக் கிளவியில் நிகழும் உகரம் வீழ்ந்துபடுதல்.

* உள் –உம் –அய் > * உள்மய் > *உண்மய் > உண்மை
* நல் –உம் –அய் > * நல்மய் > *நன்மய் > நன்மை
* தீய் –உம் –அய் > * தீய்மய் > *தீமய் > தீமை
* தாழ் –உம் –அய் > * தாழ்மய் > தாழ்மை
* கூர் –உம் –அய் > * கூர்மய் > கூர்மை

4. —*அய். —*இய் ஆகியவற்றுள் யகரமெய் வீழ்ந்துபடுதல்.

* கலய்–கு > * கலய்க்கு > கலக்கு
* கலய்ங்கு (< * கலய்–உம்–கு) > கலங்கு
* நிலய்ம்ய் (< * நிலய்–உம்–அய்) > * நிலமய் >
நிலமை|நிலம நெலம
* களிய்–பு > * களிய்ப்பு > களிப்பு
* நலிய்ம்பு(> *நலிய்–உப்–பு > *நலிம்பு > *நலிபு > நலிவு
* நடய் > நட/நடை, *கலய் > கல| கலே,
* பிறய் > பிற/பிறை
நரிய் > நரி. (தொதுவம். நர்ய்)
கரிய் > கரி. (௸ . கர்ய்)

5. வல்லொலி மெல்லொலியாதல்.

மலையாளம் : நடந்து > நடந்நு, * செய்யுந்து > செய்யுந்நு
உறங்கு > உறங்ஙு, குரங்கு > குரங்ஙு.

தமிழ் : 1) நம்ப > நம்ம 'நம்' (பேச்சுத் தமிழில்)
2) கும்பி 'வயிறு' 'கும்மெ (Kumme)'
அடிவயிறு (கொடகு)
(DED 1348, DEDS 248)

கன்னடம் : * மங்க் (⊲ * மங்கய்) ⊳ மங்ங 'மகன்'
* நொங்க (⊳ * நுங்கய்) ⊳ நொங்க 'நுகம்'

மங்ங, நொங்ங ஆகிய இரு சொற்களும் கவுடர்கள் பேசும் கன்னடத்தில் காணப்படுகின்றது. 1

தெலுங்கு : நம்பு ⊳ நம்மு, கொம்பு ⊳ கொம்மு,
அம்பு ⊳ அம்மு

6. இரட்டித்து நிற்கும் மெல்லொலிகளும், வல்லொலிகளும் ஒடுங்கி நிற்றல்.

தமிழ் : நாம்ப ⊳ * நாம்ம ⊳ நாம 'நாம்' (பேச்சுத் தமிழில்)
* செய்யுந்நர் ⊳ செய்யுநர். (செய்யுந்து-அர்.
* செய்யுந்து ⊲ * செய்யுந்து)

தெலுங்கு : தம்முண்டு (HGT. பக். 367) ⊳ தமுண்டு 2
'தம்பி'
பாம்பு ⊳ * பாம்மு ⊳ பாமு
வேம்பு ⊳ * வேம்மு ⊳ வேமு
கோயும்பு ⊳ * கோயும்மு ⊳ கோயுமு 'கொய்
* பாட்டு - அய் ⊳ பாட (pa : ta) 'பாட்டு'
* கோட்டு - அய் ⊳ கோட (ko : ta) 'கோட்டை'
* ஆட்டு - அய் ⊳ ஆட (a : ta) 'ஆட்டம்'

கன்னடம் : மவ்வ ⊳ மவ 3 'மகன்'

மேலே காட்டப் பெற்றுள்ள குறிப்புக்களை மையமாகக் கொண்டு தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகியமொழிகளில்

---

1 Gowda kannada (page 22) Dr K. Kushalappa Gowda. (Annamalai University Publication, 1970)

2 இக்கட்டுரையாளரின் தாய்மொழியில் இச்சொல் வழக்கில் உள்ளது.

நிகழும் சில குறிப்பிட்ட வாய்பாட்டு வினைமுற்றுக்கள் மற்றும் சில சொல்லமைப்புக்கள், ஆகியவற்றின் வளர்ச்சியை வரலாறு நிலையில் சுருக்கமாக இக்கட்டுரையில் ஆராயப் பெறும்.

ஆய்வு முறை: வல்லொலிகளின் முன் நிகழ்ந்த மெல்லொலிகளின் வீழ்ச்சியைக் கருத்தில் கொண்டு, உயிர்களிடையே தனித்து நிகழும் தமிழில் உரசொலித்தன்மை (Fricative Manner) யுடையனவும், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் அலையொலித்தன்மை (Voiced chavacter) யுடையனவுமாகிய ஒலிகள் தொடக்கத்தில் மெல்லொலிகளின் பின் அலையொலித்தன்மையுடைய வல்லொலிகளாக நடைபெற்று, பின்னர் தம்முடன் நிகழ்ந்த மெல்லொலிகளை இழந்தனவாகக் கருதப்பெறும். இவ்வகையில் உயிர்களிடையே தனித்து நிகழும் வகரம் அலையொலியாகிய ப (b) கரத்தின் திரியாகக் கொள்ளப்பெறும் இதனை அடிப்படையாகக் கொண்டு கன்னடத்தில் நிகழும் **நீவு** 'நீங்கள்' **அவு** 'அவை' பேச்சுத்தமிழில் நிகழும் **ஆளுவ** 'ஆட்கள்', **வந்தானுவ** 'வந்தார்கள்', **செய்தாவ** (குமரிமாவட்ட நாடார் தமிழ்) 'செய்தார்கள்' போன்ற சொற்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

நீவு ◁ * நீபு (ni : bu) ◁ * நீய்பு ◁ * நீய் - உம் - பு

அவு ◁ * அபு[4] (abu) < * அம்பு < * அய் - உம் - பு.

---

3 Nanjangud kannada (page 181) — U. P. Upadhyaya. (Deccan Collage Post Graduate and Research Institute, Poona, 1968)

4 கிழக்குக் கொள்ளேகாலம் தாலுக்காவில் ஹொலையர்கள் பேசும் கன்னடத்தில் **அபு** (abu) 'அவை' என்னும் சொல் வழக்கில் உள்ளது. (D. N. S. Bhat. Dialects of kannada in Mysore District. page 8. Bulletin of the Deccan College Reseavch Institute, Poona. Vol. xxviii Parts I & II, 1967-68)

ஆளுவ < * ஆளுப (a : luba) ⊲ * ஆளும்ப ⊲ * ஆளும்பு – அய் * ஆளும்பு – ⊲ * ஆள் – உம் – பு

வந்தானுவ ⊲ * வந்தானுப ⊲ * வந்தானும்ப ⊲ * வந்தானும்பு – அய் * வந்தானும்பு – ⊲ * வந்தான் – உம் – பு.

னகர ஈற்றுச் சொற்கள பொதுவாக வரலாற்றுநிலையில் உகரம் ஊழ்ந்து நகர ஈற்றனவாகக் கொள்ளப்பெறும். எ–டு அவன், மகன், மரன், குளன், வரின், காணின் போன்ற சொற்கள் * அவநு, * மகநு, * மரநு, * குளநு, * வரிநு, * காணிநு போன்றவற்றின் பிந்திய வடிவங்களாகக் கருதப் பெறும். ஈன், தின் போன்றவை இதில் அடங்காது.

சொற்களில் விகுதிகளின் முன் வல்லொலிகள் தனித்தோ, மிகுந்தோ நிகழ்ந்தால் அச்சொற்கள் பின்வருமாறு ஆய்வுக்கு உட்படுத்தப்பெறும். மேற்படி நிலையில் நிகழும் வல்லொலியினை அடுத்து நிகழும் விகுதியைப் பிரித்து அப்புறப்படுத்தவேண்டும். பின்னர் எஞ்சியுள்ள பகுதி வல்லிற்றினதாக இருக்கும். இத்தகைய பகுதி குற்றுகரம் ஊர்ந்த ஒன்ருக நடைபெற்று விகுதியின் முன்னர் அக்குற்றுகரத்தினை இழந்ததாகக் கருதப்பெறும். இதனைக் கருத்தில் கொண்டு மகள், அவை, மக்கள், குட்டை, போன்ற சொற்கள் முறையே * மகு – அள், * அபு – அய்,* மக்கு – அள் எனப்பகுக்கப்பெற்று பின்னர் * மகு – * அடி –, * மக்கு – போன்றவற்றின் உள் அமைப்பு ஆராயப்பெறும். 1

மேலே குறிக்கப்பெற்ற வரலாற்று மாறுதல்களும், ஆய்வுமுறைகளும் கருத்தில் கொள்ளப்பெற்று தமிழ் கன்னடம், தெலுங்கு ஆகியமொழிகளில நிகழும் வினையமைப்புக்களும் ஏனைய சொல்லமைப்புக்களும இனி ஆராயப்பெறும்.

---

1 அ. *மகு- < * மங்கு < * மய்வ்கு < * மய் – உம் – கு. (மைந்தன் < * மைந்து- < * மய்ந்து – அன்) என்ற சொல் * மய் என்னும் வேர்ச் சொல்லின் அடியாகத் தோன்றியதாகும் * மய்ந்து < * மய் – உம் – து * மங்கு – என்ற அமைப்பு – அய் விகுதியை ஏற்று தமிழில் மங்கை (* மங்கய்) எனவும், கவுடகன்னடத்தில் மவ்வ (< * மவ்வய் * மங்கய்), மகன்' எனவும் ஆயிற்று.

ஆ. * அவு – < * அபு (abu) ⊲ * அம்பு ⊲ * அய்ம்பு ⊲ * அய் – உம் – பு.

இ. * மக்கு – ⊲ * மய்க்கு ⊲ * மய் – கு.